**எரிவாயு விநியோகம் இன்று வழமைக்கு**
ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று இரவு தகவல் 15

எரிவாயு விநியோகம் நிறுத்தம்
**5 லட்சம் பேர் வேலையிழப்பு** 15


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 111
வியாழக்கிழமை 17 மார்ச் 2022
பங்குனி 03 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

# இலங்கைக்கு இனி முழு ஒத்துழைப்பு!

## பஸிலிடம் மோடி உறுதியளிப்பு



புதுடில்லி, மார்ச் 17
அயல்நாட்டு நெருங்கிய நண்பராக, அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்காக முன்நிற்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவை நேற்றுச் சந்தித்த போதே இந்தியப் 15

படப்பிடிப்பு - அமித்தா தென்னக்கோன்



# ‘கப்புடா’ நெருப்புடா...!

ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம். சமூக ஊடகங்களில் இந்தப் படம் 'வைரலாகி வருகின்றது'.

## ஜனாதிபதியின் உரை

# புஸ்ஸ்ஸ்ஸ்ஸ்வாணம்!

கொழும்பு, மார்ச் 17
நாட்டில் நெருக்கடி நிலைமை உச்சமடைந்துள்ள சூழலில் ஜனாதிபதி கோத்தாபய நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஆக்கபூர்வமான விடயங்களை முன்வைக்கவில்லை என்றும், புஸ்வாணம் போல எதிர்பார்ப்பை ஏற்படுத்திவிட்டு, ஏமாற்றத்தையே தந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. 06

## சர்வதேச நாணய நிதியத்திடம் சரணாகதியடைந்தது இலங்கை

### உரையில் உறுதிப்படுத்தினார் கோத்தா

கொழும்பு, மார்ச் 17
சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆய்வு செய்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது உரை 16

## ஏறுது டொலர் பாறுது ரூபா!

கொழும்பு, மார்ச் 17
இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 15

- அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாடு
- விலைவாசி உயர்வு
- எரிவாயு தட்டுப்பாடு
- எரிபொருள் தட்டுப்பாடு
- மின்வெட்டு

# இந்த நிலைமை இன்னும் தொடரும்

## உரையில் கோத்தா கைவிரிப்பு

கொழும்பு, மார்ச் 17
உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் 14

## ‘வீட்டை போங்கோ சேர்!’

கொழும்பு, மார்ச் 17
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உரை நேரலையாக அவரது உத்தியோகபூர்வ முகநூலிலும் ஒளிபரப்பானது. இதன்போது அவரது உரைக்கு, 'கோ ஹோம் கோத்தா' (GoHomeGota) எனப் பலரும் 14

# கோத்தாவின் உரை சந்தி சிரிக்கிறது!

20K 3.3K 2.6K

கொழும்பு, மார்ச் 17
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உரைகளுக்கு கடந்த தடவைகளைப் போல் சிரிப்புக் குறியீட்டைப் (இமோஜியை) பயன்படுத்தியவர்களே அதிகமாகும். கடந்த ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி அவரது உரைக்கு, 23 ஆயிரம் பேர் 06

## இந்த நெருக்கடிக்கு நான் பொறுப்பல்ல

கொழும்பு, மார்ச் 17
இந்த நெருக்கடி ஒரு போதும் தன்னால் உருவாக்கப்படவில்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 15

## நேற்றைய உரையிலும் ஒலித்த ‘போர் வெற்றி’

கொழும்பு, மார்ச் 17
போரை வெற்றி கொண்ட நாங்கள் எல்லாவற்றையும் வெற்றி கொள்வோம் என்று ஜனாதிபதி கோத்தாபய 15

## கோத்தா உரை முன்னே; மின்வெட்டு பின்னே!

கொழும்பு, மார்ச் 17
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு நேற்று இரவு உரையாற்றி முடிந்ததும், மின்சார சபை 15

# தக்க தருணத்தில் கைகொடுப்பதே நட்பு

## சீனாவை சீண்டினாரா இந்தியத் துணைத்தூதுவர்?

மன்னார், மார்ச் 17
ஒருவருக்கு துன்பம் வருகின்ற போது தக்க தருணத்தில் உதவிகளை யார் செய்கிறார்களோ அவர்கள்தான் உண்மையான நண்பர்கள் - நட்புக்கு அழகு. அந்த உதவியை தக்க தருணத்தில் இந்திய அரசு மன்னார் மீனவர்களுக்கு மேற்கொண்டுள்ளது 14

# இலங்கை விசாரணைக்காக காசைக் கரியாக்குகிறது ஐ.நா.

## சொல்கிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, மார்ச் 17
இலங்கை தொடர்பிலான மனித உரிமை விடயங்களுக்கும் விசாரணை அதிகாரிகளுக்கும் மில்லியன் கணக்கான டொலர் செலவிடப்படுகின்றது. அதனால் கடுகளவும் பலனில்லை - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் 15

பறாளாய் முருகன் ஆலய வளாகத்தில்

## புத்தருக்கும், பிரித் ஓதவும் ஒருபோதும் அனுமதியோம்!

தர்மகர்த்தா சபையும் மக்களும் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தின்கீழ் புத்தர் சிலை வைப்பதற்கோ, 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விலை அதிகரிப்பை எதிர்த்துப் பேரணி!

## வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் முன்னெடுப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 17**

**அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலிகாமம் வடக்குப் பிரதேசசபை உறுப்பினர்களால் சைக்கிள் பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

வலி.வடக்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் இடம்பெற்றது.

இதன்போது விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மல்லாகத்திலிருந்து வலி.வடக்குப் பிரதேசசபைவரை இந்தப் பேரணியை அவர்கள் முன்னெடுத்தனர்.

பேரணியின்போது, விலைவாசியைக் குறை, எரிபொருளைத் தடையின்றி விநியோகி, விலையேற்றம் வேண்டாம் என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் பேரணியில் பங்கெடுத்தனர். (வ-20,125)

மன்னாரில்

## எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்து பாதிப்புறும்

மன்னார், மார்ச் 17

மன்னாரில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டால், மக்களுக்கான போக்குவரத்துச் சேவை பாதிப்படையும் என்று மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கத் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் 86 தனியார் பஸ்களும் மக்கள் நலன்கருதி இயன்றளவு சேவைகளை முன்னெடுத்து வருகின்றன. தற்போது மன்னாருக்கு டீசல் வராமையால் இன்றிலிருந்து தனியார் போக்குவரத்துச் சேவை கள் பாதிப்படையும் அபாயம் தோன்றியுள்ளது. இயன்றளவு சகல கிராம மற்றும் வெளி மாவட்டங்களுக்கான சேவைகள் முன்னெ டுக்கப்படும்- என்றார். (ம-4-60)






தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை வெளிப்படுத்தும் முகமாக கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.01 பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் விநோத உடை நிகழ்வில் மாணவர்கள் தமது ஆற்றுகைகளை வெளிப்படுத்தினர். (ச-13)

## ஒரு குடும்பத்துக்கு வாராந்தம் 5 லீற்றர் மண்ணெண்ணெய்

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சியில், வீட்டுப் பாவனைக்காக வாராந்தம் 5 லீற்றர் மண்ணெண்ணெயை ஒவ்வொரு குடும்பத்துக்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் வளப்பங்கீடு தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலருக்கு இடையிலான சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் விவசாயம், மீன்பிடித்துறைகளில் உள்ளவர்கள், சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் உறுதிப்படுத்தலுடன்கூடிய கடிதத்தை, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சமர்ப்பித்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-4-214)



அக்கராயனில்

## எரிபொருளுக்கு நீண்டவரிசை!

கிளிநொச்சி,மார்ச் 17

கிளிநொச்சி, அக்கராயன் எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக, மக்கள் நீண்டவரிசையில் எரிபொருளுக்காக காத்திருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரியகுளமாகிய அக்கராயனின்கீழ் சிறுபோக நெற்செய்கைக்காக நிலப் பண்படுத்தல்களில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அக்கராயன் எரிபொருள் நிலையத்தில் விவசாயிகள் நீண்டவரிசையில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக கொளுத்தும் வெயிலிலும் காத்திருக்கின்றனர் விவசாயக் கூட்டங்களை நடத்தும் அதிகாரிகள் எரிபொருளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4-13)

## குடும்பத்தில் வன்முறை மனைவி மீது தாக்குதல்

வவுனியா, மார்ச் 17

குடும்பத் தகராறு காரணமாக தலைக்கவசம் மற்றும் விறகுக்கட்டையால் மனைவி மீது கணவன் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தலையில் பலத்த காயமடைந்த மனைவி அயலவர்களால் காப்பாற்றப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-4-இ)

## பவுஸர் உரிமையாளர்களின் பணிப்புறக்கணிப்பு நிறைவு

கொழும்பு, மார்ச் 17

இலங்கைப் பெற்றோலிய தனியார் எரிபொருள் தாங்கி ஊர்தி (பவுஸர்) உரிமையாளர்கள் சங்கம் அறிவித்த பணிப்புறக்கணிப்பில் இருந்து விலகியுள்ளது. எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து, எரிபொருள் விநியோகத்துக்கான போக்குவரத்துக் கட்டணத்தை 60 வீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை சங்கம் கோரியிருந்தது.

அந்தக் கோரிக்கைக்கு உரிய பதில் வழங்கப்படாமையை அடுத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக இலங்கை பெற்றோலியத் தனியார் எரிபொருள் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் டி.வை.எஸ்.சில்வா தெரிவித்திருந்தார். எரிசக்தி அமைச்சருடன் நேற்று நடந்த சந்திப்பை அடுத்து, பணிப்புறக்கணிப்பில் இருந்து விலகிக் கொண்டுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிச்சையான அரசால் மக்களுக்கு நீதி கிட்டாது

## மன்னார் ஆயர் சுட்டிக்காட்டு



**மன்னார், மார்ச் 17**

**இலங்கையில் இறுதிப்போரில் நடந்தேறிய போர்க்குற்றங்களுக்கு நீதியை நிலைநாட்டாமல், சர்வதேசத்தின் கோரிக்கைகளையும் புறந்தள்ளி, தன்னிச்சையாகச் செயற்படும் ஓர் அரசே இன்று ஆட்சியில் உள்ளது என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.**

தவக்கால திருமடலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை அரசானது ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளது.

இதனால் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபை சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது. ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்கால், அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும், ஏமாற்றத்திலும் உள்ளனர். இந்தத் தவக்காலத்தில் செபம், தவம், தான தருமம் ஆகிய மூன்றும் இன்றியமையாதவை. ஆகவே அவற்றை நோக்கி நம்மை இட்டுச் செல்லவேண்டும். நம்மை நாமே புதுப்பிப்பதோடு மற்றவர்கள் மட்டில் நமக்குள்ள கடமைகள், பொறுப்புக்களையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இலங்கை நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, மின்சாரத் தடை போன்றவை சாமானிய மக்களை மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரையும் வெகுவாகப் பாதித்து வருகின்றன - என்றார். (ம-4-56.60)

# முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாஷையூர் பகுதியில் முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர் யாசகம் பெறுவதற்காகப் பேருந்து நிலையத்துக்கு வருகை தருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-125)

# அரசியல் நெருக்கடிகளே இப்போதுள்ள பிரச்சினை

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

பொருளாதார நெருக்கடியைவிடவும், நாட்டின் அரசியல் நெருக்கடி நிலைமை ஆபத்தானது என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயக அரசியல் நெறிமுறைகளை முன்கொண்டு செல்ல ஜனாதிபதி தவறிவிட்டார். அரசாங்கத்தை ஆட்சிப்பீடம் ஏற்றிய தரப்புக்களுடன் பேச்சு நடத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடிகளைவிடவும், அரசியல் நெருக்கடிகள் மிகவும் பாரதூரமானவை. அரசியல் தீர்மானங்கள் ஒரு குடும்பத்தினரால் அவர்களின் சாப்பாட்டு மேசையில் எடுக்கப்படுவதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

# இடைநிறுத்தப்பட்டது எரிவாயு விநியோகம்

கொழும்பு, மார்ச் 17

எரிவாயு உற்பத்தி மற்றும் விநியோகத்தை லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் இடைநிறுத்தியுள்ளன.

இரு நிறுவனங்களிடமும் போதியளவான எரிவாயு கையிருப்பில் இல்லாமை, டொலர் தட்டுப்பாட்டால் எரிவாயுவைக் கொள்வனவு செய்ய இயலாமை மற்றும் எரிவாயு விநியோகத்துக்கான போக்குவரத்தைக் கையாள்வதற்கு எரிபொருள் கிடைக்காமை ஆகியவையே இதற்குக் காரணம் என அதன் தலைவர்கள் அறிவித்துள்ளனர். (வ-இ)



# மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 ஆயிரத்துக்கும் அதிகமான எரிவாயு சிலிண்டர்கள் மீட்பு

அம்பாந்தோட்டை அங்குனுகொலபலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன எனக் கூறப்படும் 4 ஆயிரத்துக்கும் அதிகமான எரிவாயு சிலிண்டர்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதே இடத்தில் வைத்து மக்களுக்கு அவை விற்பனை செய்யப்பட்டன. இதே வேளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை எனக்கூறிவிட்டு இரகசியமான முறையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அதுதொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)




**கிரண்ட் போஸ்டைக் கண்டால் நாயளுக்கு காலைத் தூக்கி ஒண்டுக்கடிக்கோனும் போல இருக்குமாம். அதுமாதிரி எங்கையெல்லாம் அரசமரம் நிக்குதோ அங்கையெல்லாம் விகாரை கட்டி, புத்தர் சிலை வைக்கவேணும் எண்டு சிங்களவர் நிக்கினம். உங்கட இடத்தில எங்க வேணுமெண்டாலும் விகாரையைக் கட்டுங்கோ. புத்தரை வையுங்கோ. வேணுமெண்டா இடைக்கிடை நாங்களும் வந்து கும்பிடுறம். ஆனால் ஏன் எங்கட இடத்துக்கு வந்து, எங்கட கோயில், குளங்களில உங்கட புத்தரை வைக்க இடம் தேடுறியள் ?**

பறாளாயில உள்ள பிள்ளையார் கோயிலும், முருகன் கோயிலும் அந்தக்காலம் தொட்டு பிரபலம். அதுவும் சோழியபுரம் எண்டு பேர் வைச்சு அந்த இடத்தை, சோழர்கள் ஆட்சி செய்யேக்கையே இந்த ரண்டு கோயிலும் இருந்திருக்கு. அதுக்குப் பிறகும் கனக்க அற்புதங்கள் அந்தக் கோயில்களில நடந்திருக்கு. இப்பிடித்தான் வெள்ளைக்காரர் மற்றக் கோயிலெல்லாம் இடிச்ச மாதிரி பறாளாய்க் கோயிலையும் இடிக்கப் போனவை. ஆனால் பிள்ளையார் காகமா மாறி வந்து, வெள்ளைக்காரத் தளபதியின்ர கண்ணைக் கொத்திக் கலைச்சுப் போட்டார் எண்டும் சொல்லக் கேள்வி. அதாலதான் பறாளாய்ப் பிள்ளையாருக்கு 'கண்ணைக் கோதிக் காக்கைப் பிள்ளையார்' எண்டும் பேர் வந்தது. 'பறாளாய் விநாயகர் பள்ளு' எண்ட பழங்கால இலக்கியம் கூட இந்தக் கோயிலை வைச்சு எழுதப்பட்டிருக்கு.

இப்பிடியெல்லாம் இருக்கேக்க, உவைக்கு அங்க அரசமரம் இருக்கிறது தெரியாதோ? இல்லாட்டி அதுக்குப் பிறகுதான் ஞானம் பிறந்ததோ? உண்மையில அவையள் சொல்லுற மாதிரி சங்கமித்தை கொண்டந்த அரசமரக்கிளையில வந்ததுதான் இந்தமரம் எண்டா, இவ்வளவு காலமும் ஏன் அதுக்குச் சொந்தம் கொண்டாடேலை? ஏனெண்டால், அரசமர நிழல் புத்தரின்ர சீதன உரித்தில்லை. அதுக்கு முதலே நாங்கள் அரசமரத்தை எங்கட தெய்வங்களுக்கு உரித்தான மரமாக் கும்பிடுறனாங்கள். அதுக்குப் பிறகுதான் இவையின்ர புத்தரே போய் அந்த மரத்துக்க இருந்தவர். அதைலையும் பிள்ளையாருக்கு பிடிச்ச மரம் அரசமரம் தான். முந்தை வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைச்ச கதையா, இப்ப அரசமரம் எண்டாலே ஏதோ புத்தருக்கு மட்டும்தான் சொந்தம் எண்ட மாதிரி ஆகிட்டு.

உந்த இட்டுக்கட்டுக் கதையை வைச்சுக் கொண்டு, பறாளையிலும் பிரித் ஓதி, பிறகு புத்தர் சிலையை வைச்சு, அதுக்குப் பிறகு அதை விகாரை ஆக்கிறதுக்காக கொஞ்சநாளா ஆமிக்காரர் ஓடுப்பட்டு திரிஞ்சவை. இண்டைக்கு போயா எல்லோ. அதால பிரித் ஓதப்போறம் எண்டு ஐயரைக் கேட்டிருக்கினம். ஆனால் 'கொஞ்சநாளைக்கு முதல் தான் கோயில் குருக்கள் செத்தவர். அதால கோயில் பூட்டு' எண்டு ஐயர் சொல்லிப்போட்டார். எண்டாலும் போயாவுக்கு வந்து கதவை பலாத்காரமா திறந்து பிரித் ஓதினால் என்ன செய்யிறது? அதுதான் நேற்று அவசரமா ஊர்க்காரர் கூட்டம் போட்டு, புத்தருக்கும், பிரித்துக்கும் இடமில்லை எண்டு தீர்மானம் போட்டிருக்கினம். பாப்பம், இனி ஆற்றை கண்ணை நோண்டிறதுக்கு பறாளாய்ப் பிள்ளையார் வெய்ட் பண்ணுறாரோ தெரியேலையே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சட்டவிரோத மணல் அகழ்வு; வாகனங்கள் மடக்கிப்பிடிப்பு

### இருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 17

மாந்தை கிழக்கு, பறங்கியாற்று ஆற்றுப்படுகையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு உழவு இயந்திரங்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டன. அவற்றின் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நட்டாங்கண்டல் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன் தினம் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. உழவு இயந்திரங்கள் இரண்டும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4-19)

# நீதியைத் தாருங்கள் இழப்பீடு வேண்டாம்

### உறவுகள் கொதிப்பு

**மன்னார், மார்ச் 17**

**காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீட்டை வழங்கும் அரசின் தீர்மானத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். எங்களுக்கு நீதிதான் தேவை. அரசு தரும் நிதி தேவையில்லை என்று மன்னார் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.**

இது தொடர்பில் சங்கத் தலைவி மனுவேல் உதய சந்திரா தெரிவிக்கையில்; காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்துக்கு தலா ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று ஊடகங்கள் மூலம் அறிந்தோம். இவ்வாறான சலுகைகளைத் தந்து எமது போராட்டத்தையும், ஏக்கங்களையும் திசைதிருப்ப அரசு முயற்சிக்கின்றது.

மக்கள் வாழ்வதா? அல்லது சாவதா? என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அரசால் எவ்வாறு எமக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்க முடியும்.

சர்வதேசரீதியில் மீண்டும் மீண்டும் கடன்களைப் பெறுவதற்காகவும், ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமை சார்ந்த இலங்கை விடயங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் அரசு கபட நாடகம் ஆடுகின்றது. அதற்கு நாங்கள் ஒருபோதும் துணைபோக மாட்டோம். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்ற உண்மையை மட்டும் எம்மிடம் கூறுங்கள் -என்றார். (ம-4-213)

## மன்னாரை காப்பாற்றுவதற்கு அனைவரும் திரள வேண்டும்!

### மன்னார் மறைமாவட்ட ஆயர் வேண்டுகோள்

மன்னார், மார்ச் 17

மன்னாரில் தற்பொழுது பேசும்பொருளாக இருந்து வரும் சட்டவிரோத மண் அகழ்வு, காற்றாலை, போதைப் பொருள் பாவனை என்பவற்றால் மன்னார் தீவுக்கு எதிர்காலத்தில் பெரும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அனைவரும் ஒன்றுதிரண்டு போராட வேண்டிய கட்டாயமுள்ளது.

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

மன்னார் மாவட்டத்தில் தற்போது பேசுபொருளாக சட்டவிரோத மண் அகழ்வு, காற்றாலை, போதைப் பொருள் பாவனை போன்ற விடயங்கள் மாறியிருக்கின்றன.

கனியவள மண் அகழ்வால் மன்னார் தீவுக்கு எதிர்காலத்தில் பெரும் அச்சுறுத்தல் ஏற்படவுள்ளது. எமது எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதி இந்தத் தீமைகளுக்கு எதிராகப் போராட நாம் அனைவரும் ஒன்றித்து முன்வரவேண்டும் -என்றார். (எ-60)



கிளிநொச்சி, பூநகரி- பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, யாத்திரிகர்கள் நன்மைகருதி மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் தொடர்பில் பூநகரி பிரதேசசபையினர் குறித்த பகுதிக்குச் சென்று களநிலைமைகளை ஆராய்ந்தனர். (ச-13)

## உறவுகளின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவா?

### உறவுகள் ஆதங்கம்

வவுனியா, மார்ச் 17

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவா? இதனை எவரும் பெறக்கூடாது என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நீதி அமைச்சரின் நடமாடும் சேவையில் காணாமற்போனோருக்கான அலுவலகம் வேண்டாமென நாங்கள் கூறியிருந்தோம். இழப்பீடோ, மரணச்சான்றிதழோ தேவையில்லை என்றும் கூறியிருந்தோம். அப்படியிருந்தும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மீது திடீரென ஏன் அரசுக்கு அக்கறை வருகின்றது. ஒரு லட்சம் ரூபா நிதியில் வாழ்க்கைச் செலவைக் கட்டியெழுப்ப முடியுமா? இந்த நிதியில் எமது உறவுகள் வாழ முடியுமா? நீதிக்காக இதுவரை காலமும் போராடிக் கொண்டிருந்தோமே தவிர ஒரு லட்சம் ரூபாவுக்காக நாம் போராடவில்லை.

போர் முடிவடைந்து 13 வருடங்களைக் கடந்தும் எமது உறவுகளை தேடிக்கொண்டிருக்கின்றோம். இலங்கை அரசின் நீதி மறுக்கப்பட்டபோது தான் சர்வதேசத்தை நோக்கிப் போராடி வருகின்றோம். இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி பொறுப்புக்கூற வேண்டிய கடமை இருக்கின்றது -என்றார். (ம-4-110)

### இராணுவச் சாவடியில்

## கஞ்சாப் பொதிகளுடன் 3 சந்தேகநபர்கள் கைது

வவுனியா, மார்ச் 17

8 கிலோ 75 கிராம் கேரளக் கஞ்சாவைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில், பெண் உள்ளிட்ட மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.


ஓமந்தை இராணுவச் சாவடியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த வாகனத்தை வழிமறித்து சோதனையிட்டுபோது, வாகனத்தின் பிற்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அதன்பின்னர் தொடர்ச்சியான சோதனையில், வாகனத்தின் ஆசனங்களின் கீழ்ப்பகுதி போன்றவற்றிலிருந்தும் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து வாகனத்தில் பயணித்த மாகாநுவர, மேல்ஸ்ரீபுர, கசலகப் பகுதியைச் சேர்ந்த பெண் உள்ளிட்ட மூவரை இராணுவத்தினர் கைது செய்தனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் யாழ்ப்பாணத்திலிருந்து குருநாகல் நோக்கி கஞ்சாவைக் கடத்திச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-4-18)

## சிகரெட் விற்பனை; சந்தேகநபர் கைது



வீட்டில் வைத்து வெளிநாட்டுச் சிகரெட்டுகளை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம்- மயிலங்காடுப் பகுதியிலுள்ள வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது 75 சிகரெட் பெட்டிப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நாலக்க ஜயவீர தெரிவித்தார். (ம-4-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரப் பின்னடைவுக்கு பொறுப்புக்கூறவேண்டும் பஸில்

## திஸ்ஸ விதாரண எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

**பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைவதற்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச பொறுப்புக்கூற வேண்டுமென லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளது. அத்தியாவசியத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்க்கொண்டுள்ளார்கள். வரிசையில் நிற்கும் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைப்பதை அரச தலைவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பொருளாதாரப் பாதிப்புக்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச பொறுப்புக்கூறவேண்டும். நிதியமைச்சரின் தவறான நிதி முகாமைத்துவம் குறித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கவனம் கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காகச் செயற்படுத்த வேண்டிய தீர்வு திட்டங்கள் தொடர்பிலான யோசனையை அரசாங்கத்திடம் பலமுறை முன்வைத்துள்ளோம். பங்காளிக் கட்சிகள் முன்வைத்த யோசனைகளைச் செயற்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

பங்காளிக் கட்சிகளின் யோசனைகள் செயற்படுத்தப்படுவதை நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவே தடுத்துள்ளார். தற்போதைய நிலையில் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்துள்ளதால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வுகாணும் நோக்கம் நிதியமைச்சருக்கு கிடையாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காக ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி மாநாடு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளமை காலம் தாழ்த்தப்பட்ட தீர்மானமாகும்.

சர்வகட்சி மாநாட்டின் யோசனைகள் முழுமையாகச் செயற்படுத்தப்படுமா என்பது சந்தேகத்துக்குரியது -என்றார். (ம)



# நெருக்கடியின் அடையாளமாக நிதியமைச்சர் திகழ்கின்றார்!

## அமைச்சர் வாசுதேவ வெளிப்படை

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியின் அடையாளமாக நிதியமைச்சர் திகழ்கின்றார் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ங்காளிக் கட்சிகளில் 10 கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுப் பிற்பகல் பொரளையில் உள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சந்தித்தனர். சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

# குப்பையை சுத்தப்படுத்தி சிக்கலில் சிக்கிய நாமல்!

கொழும்பு, மார்ச் 17

கொழும்பில் குப்பைகளை அள்ளி சர்ச்சைக்குள் சிக்கியுள்ளார் அமைச்சர் நாமல் ராஜபக்ச. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று எதிரணியால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட எதிரணியினர் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். ஆர்ப்பாட்டம் முடிந்த பின்னர் அந்தப் பகுதியில் வீசப்பட்டிருந்த குப்பைகளை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் நாமல் ராஜக்ச தலைமையிலான குழுவினர் ஈடுபட்டிருப்பதைப் போன்ற புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் தீவிரமாக பகிரப்பட்டன. இந்நிலையில், இது ஒரு அரசியல் நாடகம் என சிங்கள மக்கள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

மக்களின் அனுதாபத்தை பெற்றுக்கொள்ள நாமல் செய்யும் சிறுபிள்ளைத்தனமான செயல் இதுவென பலரும் சமூக வலைத் தளங்களில் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

அதேவேளை, புகைப்படங்கள் பகிரப்பட்டு சில மணித்தியாலங்களில் அனைத்து சமூக வலைத்தளங்களிலிருந்தும் அந்தப் புகைப்படங்கள் நீக்கப்பட்டுள்ளன. (ஏ-இ)




தற்போதுள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கண்டித்தும், மக்கள் தற்போது யாசகம் எடுக்கும் நிலைக்கு வந்துள்ளதை எடுத்துக்காட்டும் விதமாகவும், ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை பிரதேசசபை உறுப்பினர் ஈசன், யாசகம் எடுத்து, நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார். (ம)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகள் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, மார்ச் 17

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் தொடர்பான இரண்டு ஒழுங்கு விதிகளை, நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு காணி அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தலைமையில் நடைபெற்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

# சிலரின் கருத்துக்களை வைத்து பஸிலை பதவிநீக்க முடியாது

## பிரதமர் திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 17

ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு அமைய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவை பதவி நீக்க முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவை அமைச்சர் ஒருவரை நியமிப்பதற்கும், பதவி நீக்குவதற்குமான அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு. சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட குரோதங்களை மனதில் கொண்டு அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யுமாறு கோரி வருகின்றனர்.

நாட்டில் நிலவிவரும் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காண உதவிகளை வழங்க வேண்டுமே தவிர அரசாங்கத்தை விமர்சனம் செய்வது எதிர்க் கட்சிகளின் கடமையல்ல என்றார். (ம)

# இந்திய வெளிவிவகாரச் செயலரை புதுடில்லியில் சந்தித்தார் பஸில்!

கொழும்பு, மார்ச் 17

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை புதுடில்லியில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நிதித்துறை செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த விஜயத்தின்போது, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் இந்தியாவின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி உள்ளிட்டோரையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் 2021



புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவன் அரவிந்தன் அபிரான் 192 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதல்நிலை சித்தியைப் பெற்றுள்ளார். (ம-14,110)

**கிளிநொச்சி பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்**
சா.பிரவீன் 164

**வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி**
க.கம்ஷிகா184, அ.ஜருஷிகா176, கு.அனுஜன்172, பி.கேதுசன்171, கு.சாதனா171, க.நிவினுஷா171, ச.பிரதீஸ்171, வி.விவேகன்170, ஜெ.சஜீவினி170, ச.ரிதுஷிகா168, வி.துவாரகா168, ச.டிலோஜன்168, வி.விதுசன்167, கோ.திவாஞ்சனி166, கு.குற்றாலன்164, க.கருணிகா164, சி.சிவானுஜன்160, க.சங்கவி160, இ.றிஸ்மியா159, சு.லிதுர்ஷி159, ஜெ.விதுர்ஷிகா157, அ.அபிக்ஷா156, பி.பூர்விகா156, இ.சஞ்சீவன்155, அ.லிகிதா155, இ.தினுஜா155, ய.தக்ஷயன்154, இ.லேந்துஜன்154, ஜெ.திவிசன்154, கோ.தருணிஸ்கா 154, ம.சகானா153, த.அக்ஷயன் 152, கே.கஜானா152, டி.அஸ்வினி 149, வி.அக்ஷன்149, அ.அஷாந்148.

**புனித ஜோண் பொஸ்கோ வித்தி.**
எஸ்.அக்ஷரன் 193, பி.பூமிகா 190, ஜி.மகிதனா 189, எஸ்.அச்சுதன் 188, எஸ்.ஹம்சிதா 187, யு.காருணியா 187, ஆர்.கிஷோர் 184, ஜீ.பிரதிக்ஷன் 184, பி.சேயவன் 184, எஸ்.கிறிஷ்னி 183, எஸ்.அக்ஷன்யா 183, எஸ்.டுஷ்யா 182, சி.ஜஸ்மிதா 182, எம்.பிரதிஷ்கா 182, ஆர்.அம்தித்தா 181, ஜி.ஹன்சிகா 181, பி.கிரித்திகா 181, ஜே.பிரதிக்ஷா 181, எல்.பிரித்வி 181, ரி.சாரண்யன் 180, ஜே.ஹம்சிகா 180, எல்.ஜொறிக்மினோசன் 179, ஜி.அனுவர்ஷா 179, எஸ்.ஹர்ணயா 179, எஸ்.ஹர்னியா 179, வி.கஜவக்சலன்178, ரி.சுருதிகன் 178, ஆர்.சஷ்வின் 178, ஜே.ரித்திக் 177, வி.அஷ்விகா 177, எம்.றொஷீலிதபிஷா 177, ஜே.சாருக்ஷன் 177, எஸ்.சுகஸ்திகா 177, எம்.சுவஸ்திகன் 176, எஸ்.திபிசன் 176, எம்.பிரணவி 176, ஜே.அனே ஹனுஸ்திகா 176, பி.அனிஷ் 175, பி.அன்ரியா வர்ஷனா 175, எல்.லதுஷன் 174, எஸ்.அக்ஷயா 174, வி.கர்சிகா 173, ஜி.யாதவி 172, எஸ்.அஸ்வின் 172, என்.பாலராம் 172, ரி.லதிஹாஷ் 172, சி.செரபினா 171, ஆர்.ஜீலியன் ஷாம் 171, எஸ்.செரோன் 171, எஸ்.சந்தோஷ் 171, யு.ஆருக்சியா 170, எஸ்.அஸ்மிதன் 170, எஸ்.அம்ஷகன் 170, என்.குருபிரசாத் 170, கே.சாதுரியன் 170, எஸ்.சிவஹஸ்தனி 170, பி.லதுர்ஷன் 170, எம்.கபிஷா 170, பி.அபிஜித் 169, ரி.கொவெலிலன் 169, கே.நவஜீவா 169, ஏ.சுபிஷன் 169, எஸ்.தனுஷ் 169, பி.வருண் 169, எஸ்.ஷர்வானந் 169, சி.யாழரசி கிளோறி 169, வி.அத்விகா 169, ஜே.லிவியானா 169, எஸ்.ஆகாஷ் 168, எஸ்.அபிஷன் 168, பி.மரியாஅட்ரினா 168, எஸ்.அபிஷயா 167, ஜி.டெபோரா 167, பி.ஆதிகேசன் 166, எஸ்.சஜீஷன் 166, ஜே.ஜீலிறுக்ஷியா 166, பி.இலக்கியா 166, கே.கஜகனன் 165, கே.நித்திலன் 165, என.அபினயா 165, வி.ஹபிஷன் 165, கே.தருணீ 165, ரி.அபிசானன் 164, ஆர்.ஆதர்ஷ் 164, ஆர்.அய்லின்டேறிகா 164, ரி.சர்வினா 164, எஸ்.ஸ்ரீனிவேதிதா 164, வி.அபினயன் 163, எஸ்.வைஷ்னவன் 163, ஆர்.அபிஷா 163, ரி.போடிஷா ஹிட்லர் 163, ரி.காருண்யா 163, ஜே.நெமிரா 163, ஏ.திஷானி 163, ஜே.செசனா 162, எல்.வைஷாலி 162, எஸ்.ஷரோன் 162, பி.அன்ருனஸ் 161, எஸ்.சஞ்சேயன் 161, ரி.கஷ்வினி 161, வி.யகரினி 161, எஸ்.விஷ்ணுகாந் 161, எம்.அக்ஷயா 161, பி.கோகுலன் 160, எஸ்.பிரகாஷ் 160, எஸ்.சுலோஜன் 160, ஜே.சுஜித் 160, எஸ்.பானுஸ்யன் 159, எஸ்.அர்த்தனா 159, ஏ.டிரோன்ஷி 159, எஸ்.டர்மிஷா 159, ஜே.ஜதுஷனா 159, ஆர்.சௌதாஜினி 159, ஜே.அக்ஷயா 159, சி.நிருஷானி 159, ரி.கௌத்தமி 158, என்.மரியா அகர்ஷா 158, எம்.ஜோசுவசொலோமன் 158, எஸ்.தாருஜன் 158, ஜே.ஆன்ஷனா 158, ஏ.அபிஷோக் 157, என்.ஹரிஷ் 157, கே.பிரிந்துஷான் 157, எஸ்.அபினயா 157, கே.காவியா 157, ஆர்.றெமியா 157, பி.சஜனிகா 157, எம்.மேனுஜன் 156, ரி.மேனகன் 156, எஸ்.அனேஷா 156, எஸ்.அமாரிஸ்செர்லின் 156, பி.ஆதீஷ் 155, ஆர் தனேஸ்வர் 155, எம்.ஹர்ஷினி 155, எஸ்.ஆகாஷ் 155, ஏ.வக்ஷன் 154, எஸ்.சாரங்கினி 154, ஆர்.ஹரிஸ் 153, எஸ்.பிரணவன் 152, பி.பிரியதர்ஷன் 152, ரி.செறின்ரோன் 152, எஸ்.லஷிகா 152, ஏ.மரின் அன்ரியா 152, ஆர்.தன்வந்ரா 152, ஜே.டனிவொட்ஷன் 152, எஸ்.அப்ஷரா 151, கே.பானுகா 151, எஸ்.சண்ஷிகா 150, பி.குஷாலி 149, எஸ்.மவிஷ்கா 149, வி.கஷோன் 148.

**யா/போக்கட்டி றோ.க.த.க.பா.**
பி.சுகீர்த் 165, சு.நிஷாந் 155

**குடமியன் அ.த.க.பாடசாலை**
யோ.வேணுஜன் 165, கு.லிவிதா 159

**கெற்பேலி அ.த.க. பாடசாலை**
ப.பவளராஜ் 164, ம.விதுசனா 161, ர.யசோதனா 148.

**கிளிநொச்சி மகா வித்தி.**
வி.தஸ்வின்193, சி.ஆரூரன்184, மு.ஷயுகா182, து.ஜனுஸ்கரன்179, பி.டிலசக்ஷன் 178, சு.சுவாதித்யா 176, ப.துஷாரத் 175, ஜெ.கிரிஷரன் 175, க.தபோதரன் 175, கௌ.அருணிஷா 174, சு.தேன்கனி 173, ர.சாருஜன் 171, சு.சுகேசன் 171, சு.யதுசனா 171, த.அக்ஷயன் 169, வ.அஜிறாம் 168, ச.அஸ்மிதன் 167, பி.அபிகாஸ் 167, பா.தனந்தினி 167, ச.தியார்த்திகா 166, சு.அக்ஷிதா 165, அ.கோவர்தன் 165, வி.ஹிசாந் 165, ஜெ.ஸ்ரீஅமிர்தவி 165, சி.பவிஷ்சன் 164, பி.பவநயனி 164, பி.குயலகவி 164, ஸ்ரீ.புகழினி 163, க.ஹானுஜன் 162, அ.சங்கீத் 162, ற.சுஜானன் 161, அ.யாதவி 161, நி.கேசகி 161, ஆ.கிறேனியா 160, அ.சஸ்மிதா160, ம.ஜீவிதன் 160, த.அபினா 159, உ.தாரண்யா 159, ஜீ.புகழினியன் 158, சி.கனுஜன் 157, மு.சயூவினி 157, சி.சஞ்சனா 156, சு.அஸ்விதா 155, க.றொசனா 155, சி.நிரோஜி 154, த.தருஜன் 154, வி.சாலவி 153, சு.அஸ்வின் 151, ச.சதுஷா 150, பா.பாவழகன் 150, சு.கோபிதா 149, ப.திவானி 149.

**அராலி முருகமூர்த்தி வித்தி.**
ச.தரணிகா 154, ஆ.தீபிகா 148

**அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை**
ம.மேரிகா 148

## விவசாயிகளுக்கு இழப்பீட்டுப் பதிவு

சாவகச்சேரி, மார்ச் 17

கைதடி கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட கமக்கார அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புத் தொடர்பான பதிவுகள் நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள் தமது தேசிய அடையாள அட்டை, ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மற்றும் திரவ உரக் கலவை பெற்றமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகைதந்து விவரங்களைப் பதிவுசெய்ய முடியும் என்று கமநல சேவைகள் நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (ம-4-9)

## பரீட்சைகளின் மேற்பார்வைக்கான கொடுப்பனவை வழங்கக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 17

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கான பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வை யாளர்கள், மேலதிக பரீட்சை மேற்பார்வையாளர்கள் மற்றும் நோக்குநர்களுக்கான பரீட்சைக் கொடுப்பனவை காலதாமதமின்றி விரைவாக வழங்க வேண்டும் என்று பரீட்சைக் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த வருடம் நடத்தப்பட்ட பல போட்டிப் பரீட்சைகள், வினைத் திறன் பரீட்சைகள், க.பொ.த. சாதாரண செய்முறைப் பரீட்சை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை போன்ற நிலையக் கடமை, மதிப்பீட்டு பணிகள் மற்றும் வங்கிகளால் நடத்தப்பட்ட பரீட்சை, 'ஏஹரி' பரீட்சை உட்பட ஏனைய பரீட்சைக் கடமையில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகளையே கால தாமதமின்றி வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைக் கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஏ-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### புஸ்ஸ்ஸ்ஸ்ஸ்வாணம்!...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியேற்ற பின்னர் 5 ஆவது தடவையாக நாட்டு மக்களுக்கு நேற்று உரையாற்றினார். அவரது உரை 13 நிமிடங்களைக் கொண்டதாக அமைந்தது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் அல்லது நெருக்கடி நிலைமையை மீட்டு எடுப்பதற்கான திட்டங்கள் தொடர்பில் அவரது உரையில் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது தொடர்பில் அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

நெருக்கடி நிலைமை தொடரும் என்றும் இது உலகம் முழுவதும் உள்ள நிலைமை என்றும் குறிப்பிட்டு மக்களை இன்னும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஜனாதிபதியின் உரை தொடர்பில் எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### கோத்தாவின்...

சிரிப்பு குறியீட்டையும், 302 பேர் கோபத்தை வெளிப்படுத்தும் குறியீட்டையும், பயன்படுத்தியிருந்தனர். கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி உரைக்கு, 15 ஆயிரம் பேர் சிரிப்பு குறியீட்டையும், 137 பேர் கோபத்தை வெளிப்படுத்தும் குறியீட்டையும் பயன்படுத்தியிருந்தனர்.

ஆனால் நேற்றைய உரை முகநூலில் பதிவிடப்பட்டு சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்குள் 20 ஆயிரம் பேர் சிரிப்பு குறியீட்டைப் பயன்படுத்தியிருந்தனர். கோபத்தை வெளிப்படுத்தும் குறியீட்டை 3ஆயிரத்து 300 பேர் பயன்படுத்தியிருந்தனர். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இப்போதாவது ஒன்றுபடுங்களேன்!

ஒற்றுமைக்குத் தேவை பொது எதிரி என்பர். அதுவும் எதிரி மிக வலியவனாக இருந்தால் ஒற்றுமையின்றி எதையும் சாதிக்க இயலாது. இலங்கையின் அரசியலுக்கும் நாட்டின் அண்மைக்காலப் போக்குக்கும்கூட இது நன்றாகப் பொருந்தும். ராஜபக்சக்கள் என்ற எதிரியின் பலத்தை உணர்ந்தவர்களாக எதிர்க்கட்சிகள் இல்லை. கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றார்கள்தான். ஆனால் இந்த எதிர்ப்பு கனதியானதாக உள்ளதா? ஓரணியில் நின்று வெளிப்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்விக்கான பதில்தான் தற்போது காலத்தேவை.

பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு ஒருபக்கம் விலையேற்றம் மறுபக்கம் என்று அனுதினம் மக்கள் வதைபட்டுக் கொண்டிருக்கின்றனர். பால்மா, எரிவாயு, எரிபொருள், அத்தியாவசியப் பொருள்கள், உணவுப் பொருள்கள், மருத்துவப் பொருள்கள் என்று எதிலும் வரிசை, எங்கும் வரிசை. இனியும் தாங்கவோ சமாளிக்கவோ இயலாது என்ற அடிப்படையில் 'நாட்டை மீட்கும்' ஜனநாயக வழிப்போரை– மக்களின் போரை எதிர்க்கட்சிகள் கையிலெடுத்துள்ளன. இதன் முதற்கட்டமாக அரசுக்கு எதிரான பிரமாண்டமான பேரணியை ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் நடத்தியுள்ளது. ஜே.வி.பி. மற்றும் இதர எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்த வாரங்களில், நாள்களில் பேரணிகளை– போராட்டங்களை நடத்தவுள்ளன. ஆனால், தனித்தனியாகவே இந்தப் பேரணிகளையும் போராட்டங்களையும் அவை ஒழுங்கமைத்துள்ளன. அதாவது, ராஜபக்சக்களை பொது எதிரிகளாக அல்லாமல் தம் தனித்தனி எதிரியாகக் கொண்டு தங்கள் அரசியல் பலத்தைக் காட்டும் ஒரு சுயநலக் களமாகவே இந்தப் போராட்டத்தை அவை அணுகுகின்றன.

நாட்டை மீட்கும் போரில்கூட எதிர்க்கட்சிகளிடம் ஓர் ஒற்றுமைத்தன்மை இல்லை. தனித்தனியாக வெளிப்படுத்தும் எதிர்ப்பை விடவும் ஓரணியில் நின்று கூட்டுக்குரலாக வெளிப்படுத்தும் எதிர்ப்புக்குப் பலம் அதிகம். ஆனால், இந்த 'ஓரணி எதிர்ப்பை' கைக்கொள்ள எதிர்க்கட்சிகள் தயாரில்லை. 'ஆட்சி மாற்றத்தின் பின்னரான' காலப்பகுதி என்பதை நோக்கித்தான் எதிர்க்கட்சிகள் நகர்ந்துசெல்கின்றனவே தவிர, ராஜபக்சக்களிடம் இருந்து ஜனநாயக வழியில் நாட்டை மீட்டெடுத்துவிடவேண்டும் என்ற நிகழ்காலத் திட்டம், துடிப்பு, ஒற்றுமை எதிர்க்கட்சிகளிடம் இல்லை. அதுதான் கசப்பான உண்மை.

ராஜபக்சக்களின் நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்களிடம் எழுந்துள்ள இயல்பான எதிர்ப்பலையும் வீதிக்கு வீதி நீண்டுசெல்லும் வரிசைகளும் அதைக் கனகச்சிதமாகப் பறைசாற்றுகின்றன. ஆனால், ராஜபக்சக்களின் பின்னரான ஆட்சிகூட நிலையான அபிவிருத்தியையும் நீடித்த சுபீட்சத்தையும் கொண்டமையுமா? என்று கேட்டால் 'நம்பிக்கையின்மை' என்பது மட்டும்தான் மிச்சமாகும்.

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையென்பது காலத்தேவை. தயவுசெய்து ஒன்றுபடுங்கள். ஜனநாயக வழியில் நாட்டை மீட்பதற்குக் காட்டாத ஒற்றுமையை நாட்டை ஆள்வதில் எவ்வாறு காட்டுவீர்கள்? ராஜபக்சக்களால் வதைபட்டுள்ள மக்கள்– நாளையாவது நல்விடியலாகும் என்ற ஒற்றை நம்பிக்கையில்தான் தற்போது உலவுகின்றனர். அந்தக் குறைந்தபட்ச நம்பிக்கையைக் கூட சிதைத்துவிடாதீர்கள். 'இந்த அவஸ்தையெல்லாம் இன்னும் கொஞ்சக்காலம்தான்' என்ற நம்பிக்கையை மக்களுக்குக் கொடுங்கள். அதைத்தான் மக்கள் தற்போது எதிர்பார்க்கின்றார்கள். எதிர்க்கட்சிகளிடம் தற்போது ஏற்படும் ஒற்றுமையும் பொறுப்புணர்வும் தான் மக்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்களுக்கான 'தற்போதைய' தற்காலிகத் தீர்வு. அந்தக் குறைந்தபட்ச நம்பிக்கையையாவது கொடுங்கள். அதைவிடுத்து தனித்தனியே பிரிந்துநின்று உங்கள் அரசியல் ஆதாயத்துக்காக நாடகமாடாதீர்கள்.

**நாளொரு நல்வார்த்தை**

"ஒவ்வொரு நாளுமே இந்த ஆண்டின் மிகச்சிறந்த நாள்தான் என்று உங்கள் இதயத்தில் எழுதுங்கள்"
- ரால்ப் வால்டோ எமர்சன்



### நேற்றுமுன்தினம் மட்டும்

# 83.04 பில். ரூபாவை அச்சிட்டது மத்திய வங்கி



**கொழும்பு, மார்ச் 17**

**இலங்கை மத்திய வங்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டும் 83.04 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த திங்கட்கிழமை 22.27 பில்லியன் ரூபாவை இலங்கை மத்திய வங்கி அச்சிட்டிருந்த நிலையில் அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் மட்டும் 83.04 பில்லியன் ரூபாவை இலங்கை மத்திய வங்கி அச்சிட்டுள்ளது. 2022ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் மொத்தம் 229 பில்லியன் ரூபாவை இலங்கை மத்திய வங்கி அச்சிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டொலரை ஈட்டுவதற்குப் பதிலாக மக்களிடையே போலிப் பணப்புழக்கத்தை அதிகரிக்கும் வகையில் இவ்வாறு நாணயத் தாள்களை அளவுகடந்து அச்சிடுவதால் பணவீக்கம் கட்டுப்படுத்த முடியாத வகையில் செல்லப்போகின்றது என்று நிபுணர்கள் தொடர்ச்சியாக எச்சரிக்கைகளை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பயிர்ச் செய்கையாளர்களுக்கு காசோலைகள் கையளிப்பு

கிளிநொச்சி, மார்ச் 17

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 6 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 600க்கும் மேற்பட்ட தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தென்னை அபிவிருத்தி சபையால் 2.8 மில்லியன் பெறுமதியான காசோலைகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று 16ஆம் திகதி இடம்பெற்றது.

கல்மடுநகர், தருமபுரம் மேற்கு - கிழக்கு, புன்னை நீராவி, கோரக்கன்கட்டு, மயில்வாகனபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே குறித்த காசோலைகள் வழங்கப்பட்டன. இதன்போது தென்னைப் பயிர்ச்செய்கையில் ஏற்படும் நோய்த்தாக்கங்களுக்கான சிகிச்சை முறைகள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண தென்னை அபிவிருத்திச் சபை ஆணையாளர், கண்டாவளை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)



நாளை 18.03.2022 வெள்ளிக்கிழமை பங்குனி 4

சுபநேரம் : 06.19 - 07.49
ராகுகாலம்: 10.49 - 12.19
பங்குனி உத்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் (கிளி)



பிறப்பு : 05.03.1942 இறப்பு : 14.03.2022

மாதகலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் (கிளி) கடந்த (14.03.2022) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை சவினம்மா தம்பதியரின் அன்பு மகனும், சூசையப்பு தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், சந்திரன் (கனடா) காலஞ்சென்ற செல்வரதி மற்றும் சுமந்திரன் (லண்டன்) காலஞ்சென்ற பேபிசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், டயானா (கனடா), உஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சினி, சுதர்சன் (கனடா), றொஷானா, றொஷான் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும், ராசாத்தி, நீற்றா, பொன்றோஸ், ராணி, மதுரம், சிறி, கொலின், சூரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற யேசுரட்ணம் மற்றும் செல்வம், இராக்கினி, லோகநாதன், யொய்சி, ஸ்ரெலா காலஞ்சென்றவர்களான பேபி, துரை மற்றும் திரவியம், அருமை (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.03.2022 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச் சென்று இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 8844 861

(CS 18907) 1-6

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நல்ல முயற்சிகள் நிறைவேற ஆரம்பிக்கும். உழைப்புக் கூடும். உண்மையான மனிதர்களின் நட்பும் ஆதரவும் கிடைக்கும். பிறருக்கு உதவி செய்வதன்மூலம் பெரியோர் ஆசிகளைப்பெறுவீர்கள்.

**இடபம்:** காத்திருந்த வாய்ப்புத் தானாகத் தேடி வரும். அமைதி தேவை. பணியாளர்களைப் பாராட்டுவீர்கள். விழிப்புணர்வுடன் செயற்படுவீர்கள். வெற்றி பெறுவீர்கள்.

**மிதுனம் :** சகோதரரால் ஏற்பட்ட பிரச்சினை தீரும். அமைதி கிடைக்கும். உங்கள் கை ஓங்கும். சிறப்பான சாதனையை செய்வீர்கள். குடும்பத்தில் கவலை நீங்கி மகிழ்ச்சி பிறக்கும் நாள்.

**கடகம்:** புதிய மனிதர்களின் அறிமுகத்தால் மனநிறைவு கூடும். உங்கள் உடல் நலன் மேம்பட ஆரோக்கிய உணவுகளை அதிகப்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதுஒப்பந்தம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** கடந்த நாள்களில் ஏற்பட்ட சிரமங்கள் அகலும். கடவுள் பக்தி கூடும். உங்கள் நற்செயலால் பரிசு, பாராட்டு மழையில் நனைவீர்கள் பக்கத்து வீட்டாரிடம் இணக்கம் அதிகரிக்கும்.

**கன்னி:** சமூகத்தில் நல்லபெயர் எடுப்பீர்கள். மரியாதை கூடும். சகோதரர்களுக்கு ஏற்பட்ட தடைகள் உங்கள் உதவியால் விலகும். காத்திருந்த வாய்ப்புத் தேடி வரலாம்.

**துலாம்:** மனதுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து நல்லதொரு தகவல் வந்து சேரும். நீண்ட நாள் பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு காண்பீர்கள். புதிய கோணத்தில் சிந்தித்து வெற்றியடைவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தாருடன் இருந்து வந்த பிணக்கு முடிவுக்கு வரும். புதிய மனிதர்களுக்கு உதவிசெய்து மகிழ்வீர்கள். அனுபவம் ஏற்படும். இன்று எதிலும் ஜெயம்தான், குடும்பத்தினருடன் மகிழ்வாய் இருப்பீர்கள்.

**தனுசு:** கடினஉழைப்பால் வெற்றி பெறுவீர்கள். குடும்ப வசதியை அதிகப்படுத்துவீர்கள். நிலையான சொத்துக்கள் வாங்கும் விடயத்தில் யோசித்து முடிவு எடுப்பீர்கள். பொறுப்புணர்வுடன் செயற்படுவதால் பிரச்சினை குறையும்.

**மகரம்:** அயலில் தேவையில்லாமல் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உங்களைப் பற்றி வதந்தி பரவாமல் இருக்கக் கவனம் தேவை. முயற்சியைத் தீவிரப்படுத்துவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் கோபத்தைக் கட்டுப்படுத்தி அமைதியாக இருங்கள். இன்று உங்கள் குடும்ப நடவடிக்கைகள் திருப்திகரமாகி மகிழ்ச்சி தரும். எதிர்காலம் பற்றிய பயம் நீங்கும்.

**மீனம்:** உறவினர் நண்பர்களுக்குக் கொடுத்த கைமாற்றுப் பணம் வசூலாகும். ஊரார் சண்டை சச்சரவுகளில் சற்று விலகி நிற்பது நன்மை தரும். [illegible] தேவை.

# பகிர்ந்து புரிந்து வாழ்வோம்

தவக்காலச் சிந்தனை

பெரும் செல்வந்தர் ஒருவர் அனைத்து வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்து வந்தார். வகைவகையான உணவுகள் அவரின் உணவு மேசையை அலங்கரித்தன. அங்கே இலாசர் என்னும் ஏழை ஒருவனும் செல்வந்தரது மேசையில் இருந்து விழும் உணவுத் துண்டுகளால் பசியாறலாம் என்று வாயிலருகே தவம் கிடந்தான். ஆனால் பயனேதும் பெறவில்லை. இருவரும் இறந்தனர். நிலைமை தலைகீழானது. செல்வர் எரிநரகிலும், ஏழை இறைவன் அருகிலும் இருந்தானாம்.

எம்மிடமுள்ள செல்வச் செழிப்புக்கள் எம்மைக் கடவுளிடம் அழைத்துச் செல்லப்போவது கிடையாது. மாறாக நாம் செய்யும் தானதர்மங்களே இறைவன் பக்கம் எம்மைச் சேர்க்கும். செல்வந்தர் இலாசரை மட்டும் புறந்தள்ளவில்லை. கடவுளையும் தனது அருகில் இருந்து துரத்திவிட்டான். இலாசர் செல்வந்தரிடம் எதிர்பார்த்தது சொத்துக்களில் உடைமைகளில் பாதியையோ அவனது உணவில் பாதியையோ அல்ல. மாறாக தனது வயிற்றுப் பசிக்கான ஒருபிடி உணவையே. அதைக்கூட செல்வந்தரால் கொடுக்கமுடியவில்லை. அதற்கான மனநிலையை கொண்டிருக்க முடியவில்லை.

பசிக்காக மருந்தைத் தேடுவதை விடுத்து மருந்தாக உணவை வேண்டுவோருக்கு மனமுவந்து உதவிசெய்வோம். கிடப்பில் கிடந்து காலாவதியாகுமுன் அடுப்பேற்ற அல்லாடும் சோதரருடன் பகிர்ந்து கொள்வோம்.

எம்மைச்சூழ தேவையில் உள்ளோரை நாம் கண்டும் காணாது இருக்கும்போது இறைவனும் எம்மைக் கண்டுகொள்ளப்போவதில்லை என்பதை உணர்ந்து வாழ்வோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கு இசைவான காற்றாலைகளால் மின்சார உற்பத்தியில் தன்னிறைவடையலாம்

## புவியியற்றுறை விரிவுரையாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 17**

**மன்னார் மற்றும் பூநகரி போன்ற பிரதேசங்களில் சூழலுக்கு இசைவாக மேற்கொள்கின்ற காற்றாலைத் திட்டங்களால் மின்தேவையை நிறைவுசெய்யக் கூடியதாக இருக்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் நீர், அனல், காற்றாலை மற்றும் புதுப்பிக்கக்கூடிய மின்சாரத்தை வழங்குவதன் ஊடாக மக்களுக்கான மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது. எனினும் அனல்மின் நிலையத் துக்கான எரிபொருள்களுக்காக இன்னொரு நாட்டுடன் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அதனால் பிரதேசத்தில் காணப்படுகின்ற புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களைப் பயன்படுத்தி, மேற்கொள்ளப்படுகின்ற மின்சார உற்பத்தி தன்னிறைவாக நிலைத்திருக்கும்.

பூநகரியின் பரந்த நிலப்பரப்பு மற்றும் மன்னார் பிரதேசங்கள் காற்றுமின் உற்பத்திக்கு மிகச் சாதகமான சூழ்நிலைகளைக் கொண்டு காணப்படுகின்றன. காற்றைப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டங்கள் உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற திட்டங்களாகக் காணப்படுகின்றன. இந்தத் திட்டங்களின் மூலம் மின்தேவையின் கணிசமான ஒரு பகுதியை நிறைவுசெய்யக் கூடியதாகவும் இருக்கும்.

இதுதொடர்பாக மக்கள் மத்தியில் அச்சநிலை காணப்படுகின்றது. குறிப்பாக விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் அல்லது மீன்பிடி பாதிக்கப்படும் என்ற கருத்துப் பரவலாகக் காணப்படுகின்றது. மக்களுக்கு அதுதொடர்பான விழிப்புணர்வை ஊட்டி அல்லது பாதிப்புக்கான நிவாரணங்களை வழங்குவதனூடாக நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்குரிய செயற்றிட்டமாக இதை மாற்றலாம். தேசிய ரீதியான வலையமைப்புக்குள் மின்சாரம் இணைக்கப்படாமல் பிரதேச ரீதியான வலையமைப்புக்குள் மின்சாரம் இணைக்கப்படவேண்டும். மழைவீழ்ச்சிக்கு இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. காற்றாலைக்குக் கீழே காணப்படுகின்ற பயிர்கள் அதிகமான காற்றால் அதிகளவான ஆவியீர்ப்பை செய்கின்ற காரணத்தால் அதிகமான நீர்த்தேவைப்பாடு காணப்படுகின்றது.

பூநகரிப் பிரதேசம் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதியாகவும், மிகக் கூடுதலான காற்று இங்கு வீசப்படும் காலமும் காணப்படுகின்றன. இதற்கு மாறாக மன்னார் பிரதேசத்தின் பல பகுதிகள் பருவப்பெயர்ச்சிக் காலக் காற்றுக்கு முகம் கொடுக்கின்ற பகுதிகளாகக் காணப்படுவதால், அந்தக் காலப்பகுதிகளில் கூடுதலான மின் உற்பத்தியை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே இவ்வாறான திட்டங்களை பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்களுடனும் இணைந்து செயற்படுத்துகின்றபோது உச்சப் பயனை அடைந்துகொள்ளலாம் -என்றார். (ம-4-125)

---

## சமய தீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 17

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள யோகலிங்கேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலயப்பிரதம குரு சிவஸ்ரீ வி.செல்வ சேனக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கலாசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள்சமயதீட்சை பெறவுள்ளனர். (ம-14)

---

## களனி மின்உற்பத்தி நிலையமும் செயலிழப்பு

கொழும்பு, மார்ச் 17

எரிபொருள் இன்மையால், களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளும் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

களனி திஸ்ஸ ஒருங்கிணைந்த மின்உற்பத்தி நிலையம் 110 மெகாவாட்ஸ் எரிவாயு விசையாளி மற்றும் 55 மெகாவோட்ஸ் நீராவி விசையாளி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இது 165 மெகாவாட்ஸ் மின்சாரத்தை ஒரே நேரத்தில் உற்பத்தி செய்கின்றது.

இந்த ஆலை பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தின் துணைத் தயாரிப்பான நாப்தா எரிபொருளிலும், மாற்று ஆதாரமாக டீசலிலும் செயற்படும் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4-இ)

---

## தைத்த ஆடைகளின் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 17

மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக, அனைத்து தைத்த ஆடைகளின் விலைகளையும் 30 தொடக்கம் 31 வீதம் வரை அதிகரிக்க வேண்டியுள்ளது என்று இலங்கை சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மூலப்பொருள்களுக்கான இறக்குமதிக்கு 40 அடி கொள்கலனுக்கு கப்பல் நிறுவனங்கள் இதுவரை 2 லட்சம் ரூபாவை அறவிடுகின்றன.

ஆனால் தற்போது அது ஒரு மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளது. தற்போதைய சூழ்நிலை காரணமாக உள்ளூர் ஆடைத்தொழில் துறை கடும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றது. இதனால் ஆயிரக்கணக்கானோர் வேலையிழந்துள்ளனர் என்று சங்கத்தின் தலைவர் நிருக்ஸகுமார தெரிவித்துள்ளார். (ம-4-இ)

---



## ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பெண்ணுரிமை செயற்பாட்டாளர் மீது அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு

நியூயோர்க், மார்ச் 17

ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர் மீது அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ராஜி பட்டர்சன் என்ற அந்தப் பெண் 'சிறந்த 20 பெண்கள்' என்ற விருதைப் பெறுவதற்கு அவரது குடும்பத்துடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் போது ராஜி பட்டர்சன் காதில் சிறிய காயத்துடன் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

அவர் ஈழத்தமிழர்களின் மனித உரிமை செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

---

## கட்டடப்பொருள்களின் விலை திடீர் உச்சம்!

### வீட்டுத்திட்டப் பயனாளிகள் அந்தரிப்பு

சாவகச்சேரி, மார்ச் 17

கட்டடப் பொருள்களின் விலை திடீரென அதிகரித்துள்ளதால், கடந்த வருடம் வீட்டுத் திட்டம் பெற்ற பயனாளிகள், தொடர்ந்து வீட்டுப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

பயனாளிகள் பலருக்கு இரண்டு கட்டங்களும், சிலருக்கு மூன்று கட்டங்களும் கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்டுள்ளன. தற்போது சிமெந்து மற்றும் கம்பிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதால், அரசால் வழங்கப்படும் கொடுப்பனவை விட இரு மடங்கு தொகை செலவிடும்நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாக பிரதேச செயலக அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு, அவர்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளின் தற்போதைய நிலை குறித்து தொழில்நுட்ப உத்தியோகத்தரின் விதப்புரைக்கமைய கொடுப்பனவுகள் 5 கட்டங்களாக வழங்கவேண்டும். ஒவ்வொரு பயனாளிகளாலும் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு அமைவாக, கட்டம் கட்டமாகக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது- என்றனர். (ம-4-9)

---

## யாழ். கலாசார நிலையம் திறப்பு மாநகரசபைக்கு அறிவிப்பில்லை

### பிரதி முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

இலங்கை - இந்தியா நட்புறவின் அடையாளமாக யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட இந்திய கலாசார மத்திய நிலையம் திறக்கப்படவுள்ளமை தொடர்பில், யாழ். மாநகர சபைக்கு அறிவிக்கப்படவில்லை என்று யாழ். மாநகர பிரதி முதல்வர் துரைராஜா ஈசன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ். இந்திய கலாசார மத்திய நிலையத்தைத் திறந்துவைப்பதற்காக வருகின்றார் என்று ஊடகங்கள் வாயிலாகவே அறிந்தோம். யாழ். இந்தியத் துணைத்தூதர் கலாசார மத்திய நிலையத்தைப் பார்வையிட்டமை தொடர்பில் அங்கு பணிபுரிபவர்கள் எமக்குத் தெரிவித்தனர்.

இந்தியப் பிரதமரின் வருகை தொடர்பில் தூதரகம் எமக்கு உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கவில்லை. ஆனால் தூதரக அதிகாரிகள் மத்திய நிலையத்துக்குச் சென்று பார்வையிட்டமை இந்தியப் பிரதமர் வருகைக்கான அடையாளம் -என்றார். (ம-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பரவலாக மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் இன்று பரவலாக மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில்,

நாட்டில் இன்று பரவலாக மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது. சப்ரகமுவ, மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் காற்றானது வடகிழக்குத் திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புக்களிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புக்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது -என்றுள்ளது. (ம)

# யானைகளை விரட்ட உதவிகள் வேண்டும்

## பொலிஸாரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 17

எமது கிராமத்தில் இருந்து யானைகளை விரட்டுவதற்கு, பொலிஸார் உதவ வேண்டுமென்று அம்பலப்பெருமாள் குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அம்பலப்பெருமாள்குளத்தின் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பொது மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கையை கிராம மக்கள் விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக கிராமத்துக்குள் வருகை தரும் யானைகள் தென்னைகளை அழித்து வருகின்றன. யானைகளை விரட்டுவதற்கு யானை வெடிகளை பெற்றுத்தரவேண்டும். அதேவேளை, குரங்குகளைக் கலைப்பதற்குரிய காற்றுத் துப்பாக்கியைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

கிராமத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் தகவல் வழங்கினால் பொலிஸார் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பொதுமக்கள் வலியுறுத்தினர். (ம-4-13)



# தொப்புள்கொடி உறவு என்றும் பிரியக்கூடாது

## இந்தியத் துணைத்தூதுவர் வேண்டுகோள்

கிளிநொச்சி, மார்ச் 17

**இலங்கை- இந்தியர்களுக்கு இடையிலான தொப்புள்கொடி உறவு எப்போதும் ஒரு மேடைப் பேச்சாக இருக்கக்கூடாது. அதையும் தாண்டி உறவு நீடிக்க வேண்டுமென்று யாழ்.இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்தார்.**

பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மனிதாபிமான உதவிகள் வழங்கும் நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடற்றொழிலாளர்களின் தேவைகள் எதுவாக இருந்தாலும் துணைத் தூதரகத்தை நாடலாம். இந்திய அரசு தொடர்ந்தும் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக மீனவ சமூகத்தில் கொண்டுள்ள அக்கறை காரணமாக இவ்வாறான உதவிகளை வழங்கி வருகின்றது.

எங்களது எண்ணங்கள், சிந்தனைகள் எப்பொழுதும் உங்களுடன் இருக்கும் -என்றார். (ம-4-214)

# போக்குவரத்துத் திணைக்களத்தால் வடமாகாணத்தில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 17

வட மாகாணத்தில் இருநாள் நடமாடும் சேவையை மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

பொதுமக்களுக்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களங்களுக்கு ஊடாக மேற்கொள்ளப்படும் சேவைகளில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாக மத்திய மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் இணைந்து இந்தச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

கைதடி ஏ-9 வீதியிலுள்ள வடக்கு மாகாண சபை வளாகத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 3 மணி வரை இந்தச் சேவை இடம்பெறவுள்ளது.

இதன்போது, 2014-2015ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட தன்படி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார்சைக்கிளுக்கான நிபந்தனைகளை நீக்குதல், மத்திய மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு இதுவரை உடைமை மாற்றல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையாக உள்ள விடயங்கள், புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், அனைத்து வாகனங்களுக்குமான அடையாள மாற்றம் எடைச் சான்றிதழ் வழங்குதல், உடைமை மாற்ற விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல், ஓட்டுநர் பரீட்சார்த்த தேர்வு, வாசித்தல் எழுதுதலில் விசேட தேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சை போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளன.

இந்தச் சேவைகளைப் பெற விரும்புபவர்கள் அருகிலுள்ள பிரதேச செயலகங்கள் அல்லது வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, 2022ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதிக்கு முன்னராக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# முடிவு எட்டப்படாவிடில் மீண்டும் போராடுவோம்

## முன்பள்ளி ஆசிரியர்கள் அறிவிப்பு

மன்னார், மார்ச் 17

அதிகாரிகளின் உத்தரவாதத்துக்கு அமைவாக, இரு வாரங்களுக்குள் தீர்க்கமான முடிவு எட்டப்படாவிடில், மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என்று முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்கள் சுமார் மூவாயிரம் பேர் கடந்த காலங்களில் ஒருசில கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் அதிகாரிகள் தீர்வு வழங்கப்படும் என்று உறுதியளித்ததால் மீண்டும் கடமைகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இன்றைய பொருளாதார சிக்கலைக் கருத்திற் கொண்டு தங்களது கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4-60)

# இணையவழி கதையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி சர்வதேச அரங்கக் கதையாடலின் 14ஆவது தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'உலகம் போற்றும் சிலம்பில் நாடகக் கூறுகள்' என்ற தலைப்பில் தமிழ்நாடு முனைவர் வெ.முத்துலட்சுமி, 21ஆம் திகதி திங்கட்கிழமை 'வேட்டுவச் சடங்காற்றுகையின் குணமாக்கலும் அதன் மானுடவியல் பார்வையும்' என்ற தலைப்பில் மட்டக்களப்பு க.பத்திநாதன், 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 'நம்மவர்கள் திரைத்துறையில் சாதிப்பதற்கான வழிமுறைகள்' என்ற தலைப்பில் சுவிஸ் ரகு, 23ஆம் திகதி புதன்கிழமை 'சேக்ஷ்பியரின் நாடகங்களும் பபூன் பாத்திரங்களும்' என்ற தலைப்பில் இந்தியா பேராசிரியர் ந.இளங்கோ, 24ஆம் திகதி வியாழக்கிழமை 'அரங்கத்திறன்களை விருத்தியாக்குவதனூடாக ஆசிரியர்களின் ஆளுமையை வலுவூட்டல்' என்ற தலைப்பில் இலங்கை கலாநிதி பா.தனபாலன் ஆகியோர் கதையாடவுள்ளனர்.

இணையவழி அரங்கக் கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம்செயலி இலக்கம் 6473348261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் துன்பத்துக்கு பஸிலே முழுப்பொறுப்பு

## திட்டமிட்டு பின்னடைவை ஏற்படுத்தினாரென உதய கம்மன்பில சரமாரிக் குற்றச்சாட்டு

**கொழும்பு, மார்ச் 17**

**மக்கள் வரிசைகளில் நிற்கும் துன்பங்களுக்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிதியமைச்சரின் தவறுகளால் எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்துகளைப் பெறுவதற்கு பெரும்பாலான பொதுமக்கள் வரிசையில் நிற்கின்றனர். கடந்தாண்டு பொருள்களை இறக்குமதி செய்ய 20.6 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டது. அதில் மருந்து, மருத்துவ உபகரணங்கள், எரிபொருள், எரிவாயு மற்றும் நிலக்கரி இறக்குமதிக்காக 4.6 பில்லியன் அமெரிக்க டொலரே செலவிடப்பட்டது. அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்காக கிட்டத்தட்ட 6 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டது. புற்றுநோய் அல்லது இருதய நோய்க்கான மருந்துத் தட்டுப்பாடு காரணமாக ஒருவர் உயிரிழந்தால், அவர்களது மரணத்துக்கு அமைச்சர் பஸில் ராஜபக்சவே பொறுப்பேற்க வேண்டும். பொருளாதாரத்தை பல வீனப்படுத்த நிதியமைச்சர் வேண்டுமென்றே நடவடிக்கை எடுத்தார்- என்றார். (எ-இ)

## எரிபொருள் பயன்படுத்துவோரே சுமையையும் தாங்கவேண்டும்

### எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் குறைந்த சதவீத மக்களே டீசல், பெற்றோலைப் பயன்படுத்துகின்றனர் என்று கூறியுள்ளார் கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெற்றோல், டீசல் விலைகளை உயர்ந்தால் வாகன உரிமையாளர்களே அதற்கான சுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டும். வாகனங்கள் இல்லாத அப்பாவி ஏழை மக்கள் இதற்கான சுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இன்று எரிபொருள் மற்றும் பால்மாவுக்கு வரிசையில் நிற்கும் மக்கள் திட்டுகின்றனர். இன்னும் 10 மாதங்களில் இந்த நெருக்கடி முடிவுக்கு வரும். - என்றார். (எ-இ)

## மஹோற்சவத்தில் தெய்வீகப்பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 17

உடுவில் மல்வம் ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவப் பெருவிழா கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 20ஆம் திகதிவரை நடைபெறும் உற்சவங்களில் தினமும் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை எம்.பி.அருளானந்தம் தெய்வீகப்பேருரைகளை வழங்கவுள்ளார். தெய்வீகப் பேருரைகளில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு சமய அறிவு வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## இலங்கையில் தற்போதும் குடும்ப ஆட்சி

### விமல் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 17

இலங்கையில் தற்போதும் குடும்ப ஆட்சி இடம்பெறுவது உண்மையே. அதில் சிரேஷ்ட அமைச்சர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு நாமல் ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ச அரசு மீது குடும்ப ஆட்சிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதனைவிட அதிகளவில் தற்போதைய அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

2015ஆம் ஆண்டில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களே பதவி வகித்தனர். தற்போது அதனைவிட அதிகமானவர்கள் பதவி வகிக்கின்றனர்.

அமைச்சரவையை எத்தனை முறை மாற்றினாலும், நாமல் ராஜபக்சவுக்கு ஏதாவது ஒரு பதவியேனும் வழங்குவர் - என்றார். (ம-4-இ)



## மலையகத் தமிழர் அபிலாசைகள் ஜப்பானியத் தூதுவரிடம் ஆவணம்

கொழும்பு, மார்ச் 17

மலையகத் தமிழர் அபிலாசைகள் மற்றும் உரிமைகளை வலியுறுத்தி, ஜப்பானியத் தூதுவர் ஹிடேக்கி மிஸுகோஷியிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியால் ஆவணமொன்று நேற்றுக் கையளிக்கப்பட்டது.


தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்கள் பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக இணைந்து ஆவணத்தைத் தூதுவரிடம் கையளித்தனர். மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம், ஐ.நா. மனித உரிமை ஆணையகம் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதற்குப் பதிலளித்த தூதுவர், வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ்மக்களைப் பற்றியும், ஏனைய சமூகங்களைப் பற்றியும் ஓரளவு அறிந்துள்ளேன். இனிமேல் மலைநாட்டுத் தமிழ் மக்களைப்பற்றி மேன்மேலும் அறியவும், அவர்களுக்கு உதவவும் ஜப்பானிய அரசும், மக்களும் விரும்புகின்றனர் - என்றார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, மலையக விவகாரங்களை படிப்படியாக சர்வதேச மயப்படுத்தி வருகின்றது. அந்த அடிப்படையிலேயே மலையகத் தமிழர் அபிலாசைகள் ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஏனைய சர்வதேச நட்பு நாடுகளின் பிரதிநிதிகளையும், ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியையும் சந்திக்கத் தீர்மானித்துள்ளோம் என்று கூட்டணியினர் தெரிவித்தனர்.

இலங்கை அரசுடன் இருக்கின்ற நட்புறவைப் பயன்படுத்தி, மலையக மக்களின் விவகாரங்கள் தொடர்பில் அக்கறை செலுத்த அரசை வலியுறுத்துமாறு தூதுவரைக் கேட்டுக்கொண்டோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (ம-4-இ)



## அஞ்சலியும் பொதுக்கூட்டமும்

மன்னார், மார்ச் 17

மன்னார் மாவட்டத்தில் மறைந்த கலைஞர்களுக்கான அஞ்சலி நிகழ்வும் மாவட்ட கலாசார பேரவையின் பொதுக்கூட்டமும் நேற்று மாலை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. மாவட்டத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்காக உழைத்து மறைந்த கலைஞர்களின் திரு உருவ படங்களுக்கு மலர் மாலை அணிவித்து சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் மாவட்ட கலாச்சார பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

ஜூன் மாதம் திருவள்ளுவர் விழாவும் ஓகஸ்ட் மாதமளவில் மாவட்ட கலை பண்பாட்டு பெருவிழாவும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதி மாவட்ட செயலாளர் வே.சிவராஜா மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன் உட்பட பிரதேச கலாசார உத்தியோகத்தர்களும் கலைஞர்களும் கலந்து கொண்டார்கள். (ம-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமான கல்வியுடன் வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்தும் ஸ்பெயின்



நவீன ஐரோப்பாவின் அழகிய நாடுகளில் ஒன்றே ஸ்பெயின். ஸ்பெயின் நாடானது தென்மேற்கு ஐரோப்பாவில் ஐபீரியன் தீபகற்பத்தில் பிரான்ஸுக்கும் அன்டோராவுக்கும் இடையில் போர்த்துக்கல்லின் கிழக்குக்கும் தெற்கே மொறொக்கோவும் அமைந்துள்ளது. இது பிஸ்கேயின் கடலினதும் (அட்லாண்டிக் பெருங்கடலின் ஒரு பகுதி) மற்றும் மத்தியதரைக் கடலினதும் கடற்கரையோரங்களில் உள்ளது. ஸ்பெயினின் தலைநகராகவும் பெரிய நகராகவும் மாட்ரிட் நகரம் அமைந்துள்ளது. இந்நாட்டின் நீண்டகால வரலாறு, தனித்துவமான கலாசாரம், நிலையான பொருளாதாரம் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரங்கள் என்பன இந்நாட்டின் சிறப்பியல்புகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஸ்பெயினுக்கு நிலையான பொருளாதாரம் காணப் படுகின்றது. இது உலகின் பன்னிரன்டாவது மிகப் பெரிய பொருளாதாரம் மற்றும் வழங்கக் கூடிய பல்கலைக்கழகங்களும் அங்கு காணப்படுகின்றன. கல்வி கற்பவர்களுக்கு பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டாலும் இந்நாட்டில் அது பற்றிய கவலைகள் கிடையாது. ஏனெனில் குறைந்தளவு கட்டணம், சாதாரண வாழ்க்கைச் செலவுகள் என ஏனைய மாநகரங்களிலும் பார்க்க குறைந்தளவு செலவினங்களே காணப்படுகின்றதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள. ஸ்பானிய மொழியானது 20 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளில் பயன்படுத்தப் படும் மொழியாவதோடு உலகில் அதிகளவு பேசப் படும் மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் மொழிகளில் ஒன்றாகவும் கலாசாரத்துடனான புராதன வரலாற்றுப் பெருமைகளையும் கொண்ட ஒரு மொழியாகவும் இது உள்ளது.

கற்றல் அனுபவத்தையும் அறிவையும் பெருக்கிக் கொள்வதற்கு உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு வருகைத்தருவதாக ஆய்வுகள் சான்று ஸ்பெயினில் அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களுடன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளும் உள்ளன. இவை குறைந்தளவிலான கட்டணத்தில் இளங்கலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு களை ஆங்கில மொழியில் கற்பிக்கின்றன. இப்பட்டப்படிப்பு கட்டணங்கள் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த வீதமாகவே காணப்படுகின்றன. ஏனைய ஐரோப்பிய நகரங்களுடன் ஒப்பிடுகையில் ஸ்பெயினில் குறைந்த வீத வாழ்க்கைச் செலவு மற்றும் ஏனைய காரணிகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. சர்வதேச மாணவரொருவருக்கு கல்வி கற்கும் காலத்தில் வாரத்துக்கு 20 மணித்தியாலங்கள் வரையில் வேலை செய்ய முடியுமென்ற காலவரையறை காணப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்கள் தங்களது வாழ்க்கைச் செலவுகளையும், கற்கைச் செலவுகளையும் திறம்பட முகாமைத்துவம் செய்துகொள்ள முடிவதோடு தங்களது ஓய்வு நேரங்களையும் மகிழ்ச்சிகரமானதாகக் கழித்திட வாய்ப்பு கிட்டுகின்றது. 2015ஆம் ஆண்டு ஸ்பெயின் பல்கலைக்கழகங்களில் 153-193 மாணவர்களே கல்வி கற்றனர். இதனைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் மேற்குறித்த எண்ணிக்கையில் 27% உயர்வு காணப்பட்டதாக புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

இதுபோன்ற சகல விதமான வாய்ப்புகளும் வசதிகளும் ஒருங்கே பெற்ற ஸ்பெயினுக்கு செல்வதற்கு விசாவைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் மற்றும் அங்கு கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இது தொடர்பிலான மேலதிக விவரங்களை அறிந்துகொள்வதற்கு Beverley International (Pvt) Ltd க்கு வருகைத்தரவும். இந்நிறுவனம் ஸ்பெயின் நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட முகவராவதோடு 15 வருட கால சேவையை வழங்கும் பெருமைக்குரிய நிறுவனமுமாகும். இந் நிறுவனம் 100% வெற்றிகரமான விசா அனுபவத்தைக் கொண்டிருப்பதோடு தமது முழு வழிக்காட்டல்களையும் பெற்றுக்கொடுக்கும் என்பதற்கு உத்தரவாத மளிக்கின்றது. ■

## விளம்பர விவரணம்



**Upul Herath**
Chairman and Managing Director
*Beverley International*

**Gisela Combrinck**
Licensed Immigration Adviser
License No : 200801018
*Beverley International*

உயர்ந்த வாழ்க்கைத்தரத்தைக் கொண்ட நாடாகவும் அறியப்படுகின்றது. ஆடைகள், உணவு மற்றும் பான வகைகள், உலோகம் மற்றும் உலோக உற்பத்தி, இரசாயனங்கள், கப்பல் கட்டுதல், வாகனங்கள், இயந்திரக்கருவிகள், களிமண், பாதணிகள், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஸ்பெயினின் முக்கிய தொழில்களாகக் காணப்படுகின்றன. தானியங்கள், காய்கறிகள், ஒலிவ், மது, திராட்சை, சர்க்கரைபீட், சிட்ரஸ், இறைச்சி வகைகள் என்பன இந்நாட்டின் பல பகுதிகளிலும் வேளாண்மை செய்யப்படுகின்றன.

ஸ்பெயினின் மற்றுமொரு பொருளாதார அங்கமாக சுற்றுலாத்துறையைக் குறிப்பிடலாம். இது ஒரு அங்கம் எனக்கூறுவதை விட முக்கிய காரணி என சிறப்பித்துக் கூறலாம். இங்கு பல நாடுகளிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் வருகைதருவதோடு உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கும் குறைவில்லை. சுற்றுலா எனும்பொழுது அனைவரும் ஏதோவொரு காரணத்துக்காக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு பயணிப்பதில்லை. அதற்கு கால நிலை, சுற்றுச்சூழல், மக்கள், புராதன இடங்கள், உணவுகள், நடனம் மற்றும் இசை என பல்வேறு காரணிகளை முன்னிறுத்தலாம். ஆனால், இவையனைத்தும் ஓரிடத்திலேயே கிடைக்கும் என்பது நமக்கு ஆச்சரியத்தையளிக்கும். ஆம் ! அவ்வாறான தொரு இடமே ஸ்பெயின். தி பில்பாவோவில் கக்கன்ஹெய்ம் அல்லது மாட்ரிட்டில் உள்ள பிராடோ அருங்காட்சியகம், செவில்லில் உள்ள ஜிரால்டா, கிரனாடாவில் உள்ள அல்ஹம்ப்ரா, பார்சிலோனாவில் உள்ள சாக்ரடா குடும்பம், சாண்டியாகோ டி காம்போஸ்டெலா போன்ற வரலாற்றுமிக்க தளங்களையும் மத்தியதரைக்கடலில் வலென்சியா, கட்டலோனியாவின் பகுதி, மல்லோர்கா, இபிசா, கேனரி தீவுகள் போன்ற கடற்கரைகளையும் குறிப்பிடலாம்.



மேற்குறித்த அம்சங்களுடன் மேலும் ஒரு முக்கிய அம்சமான உயர்தரத்திலான கல்வியை பகிர்கின்றன. சர்வதேச அளவிலான மாணவர்கள் வாழ்க்கைப் பற்றிய புதிய அணுகு முறைகளையும் கருத்துக்களையும் உருவாக்குவதற்கான வாய்ப்பை ஸ்பெயின் பெற்றுக் கொடுக்கின்றது. இங்கு சகல நிலைகளிலுமான மாணவர்களுக்கு முறையாக வடிவமைத்து, ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி முறை கற்பிக்கப்படுவதால் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகத்திலிருந்தும் தரமான கல்வியை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. மேலும் சர்வதேச கற்கைகளுக்கு உலகளவில் மூன்றாவது இடத்தைக் கொண்டுள்ள ஸ்பெயின் நாடானது ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாட்டு மாணவர்களதும் முதல் தெரிவாக உள்ளமையை சிறப்பித்துக் குறிப்பிடலாம்.

ஸ்பெயினில் பெருமளவு கற்கைகள் ஸ்பானிய மொழியில் கற்பிக்கப் பட்டாலும், மாணவர்கள் ஆங்கில மொழியிலான கற்கைகளை தங்களது விருப்பத் தேர்வாகக் கற்கமுடியும். ஒரு சர்வதேச மாணவர் அந்நாட்டு மொழியை பேச முடியாத சந்தர்ப்பங்களில் ஆங்கில மொழியில் கற்பதற்கான வாய்ப்புக்கள் இங்கு உண்டு. இங்கு கல்வி கற்க சென்றிருக்கும் ஒருவர் ஸ்பானிய மொழியில் தேர்ச்சி பெற்றிருக்காத போதும் தமது கற்கையை ஸ்பானிய மொழி ஆங்கிலம் போன்ற இருமொழிகளில் கற்க விரும்பினால் இரு மொழிகளிலும் கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள், பட்டப்படிப்புகளை தெரிவு செய்திடலாம். ஆங்கில மொழி உபயோகப்படுத்தாத நாடொன்றிலிருந்து ஸ்பெயினுக்கு கற்கச் சென்றிருந்தாலும் ஆங்கில மொழி புலமைக்கான கற்கைக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கக்கூடிய வாய்ப்பு அந்நாட்டு பல்கலைக்கழகங்களில் உண்டு. ஸ்பெயின் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தங்களது கற்கை... லும் ஸ்பானிய ... பம் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 28 - 03 - 1953 |  | 16 . 03 . 2022 |

### கிருஸ்ணர் குணரத்தினம்

(முன்னாள் பொது முகாமையாளர், அகில இலங்கை சமாதான நீதவான்)

இக்கிரானை கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் குணரத்தினம் நேற்று (16.03.2022) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணர் சீதை தம்பதியரின் அன்பு மகனும், கணபதி பொன்னு தம்பதியரின் அன்பு மருமகனும், தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்புச் சகோதரனும், கமலினி (நல்லூர் பிரதேச செயலகம்), கோகுலன் (கட்டடங்கள் திணைக்களம்-வவுனியா), கேசவன் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை-கோப்பாய்), கௌசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனரூபன் (யா/ கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி), ராஜினி (வலயக்கல்வி அலுவலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷயா, கிஷாரன், கிருத்திகேஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2022) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(CR 8099) (4/6)

## மரண அறிவித்தல்



### செல்வத்துரை சந்திரகுமார்

மூளாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை சந்திரகுமார் கடந்த (12.03.2022) அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்வத்துரை தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி முத்தையா தம்பதிய ரின் மருமகனும், விஜிதாதேவியின் அன்புக் க்ணவரும், நந்தினி, தபோஜினி, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், ராகவன், Christiane ஆகியோரின் அன்பு மாமனா ரும், துளசி, மயூரன், மாயா, நனி ஆகியோரின் அன்புப் பேரனும், சூரியகுமார் (கனடா), கஜேந்திரகுமார் (ஜேர்மனி), ஆனந்தகுமார், கௌரி (மூளாய்), பிரேம்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2022) வியாழக்கிழமை Bestattungshaus Mertens, Ittmecker weg-2,59872 meschede (ஜேர்மனி) இல் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

69, மூளாய் றோட், சுழிபுரம். தகவல்: கௌரி

(CS 18905) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவினில்...

அன்னை மடியில்
21 . 10 . 1939



ஆண்டவன் அடியில்
28 . 03 . 2021

## திருமதி பொன்னம்மா சண்முகநாதன்

**திதி: பங்குனி மாத பௌர்ணமி**

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
கண்மூடித் திறக்கும் நேரத்தில் எங்களைத்
தவிக்கவிட்டு நிரந்தரமாகப் பிரிந்தீர்களே!
உங்களுக்கு நிகர் இனி எங்களுக்கு யார்?
ஆண்டொன்று ஆனாலும் அணையாதே
உங்கள் நினைவுகள்.


இல.88, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

(cs 43606 )(2.6)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
30 . 04 . 1931



ஆண்டவன் அடியில்
15 . 03 . 2022

## பொன்னம்பலம் மதியாபரணம்

யாழ். புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மதியாபரணம் நேற்றுமுன்தினம் 15-03-2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலெட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், வரதலெட்சுமி (சுவிஸ்), காலஞ்சென்ற சத்தியானந்தம் மற்றும் சிவானந்தம் (பிரான்ஸ்), சர்வானந்தம் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுந்தரம் (சுவிஸ்), ஜெயந்தினி, விஜிதா(பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ் சென்றவர்களான அமிர்தம்மா, சற்குணம், திருவாதிரை மற்றும் நாகம்மா, செல்வராசா (பிரான்ஸ்), இராசமணி (கிளி- கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, இராசையா மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ஞானசோதி(பிரான்ஸ்), ஏரம்பமூர்த்தி(கனடா) மற்றும் காலஞ்சென்ற கணேசரெத்தினம் மற்றும் யோகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், விதுர்சன்(பிரான்ஸ்), கனிஷ்டன், சரண்யா, கிதுசன் (பிரான்ஸ்), அருளினி (பிரான்ஸ்), கிஷாலினி (பிரான்ஸ்), திலக்ஷன் (பிரான்ஸ்), பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (17-03-2022) வியாழக்கிழமை மு.ப 09:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கேரதீவு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்குடுதீவு,
7 ஆம் வட்டாரம்.
077 078 4029

(cs 43599) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# உக்ரைன் போர்க்களத்தில் இரு செய்தியாளர்கள் பலி

கீவ், மார்ச் 17

உக்ரைன் - ரஷ்யா போர்க்களத் தில் செய்தியாளர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச ஊடகமொன்றின் செய்தியாளர்களான பெய்ரி சாக்ர்ஷிவ்ஸ்கி, ஒலெக்சான்ட்ரா சாஷா குவ்ஷினோவா ஆகிய இருவருமே உக்ரைன் போரில் கொல்லப்பட்டனர். இவர்களுடன் பயணம் செய்த மற்றொரு பத்திரிக்கையாளரான பெஞ்சமின் ஹால் படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02 . 01 . 1940



மறைவு
07 . 04 . 2020

## அமரர் பொன்னுத்துரை சண்முகசுந்தரம்

திதி: பூர்வ பக்ஷ சதுர்த்தசி (17.03.2022)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டு இரண்டு மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

077 788 7854
077 579 6787

குடும்பத்தினர்

(cs.43605 (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13 . 04 . 1951



மறைவு
17 . 03 . 2021

## திரு.A.C. யோண் (ஜெயா)

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - மக்கள் வங்கி -
யாழ்ப்பாணம், திருமலை, கொழும்பு)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்

Death leaves a heartache
no one can heal,
Love leaves a memory,
no one can steal
He will be missed
but not forgotten,
We will always cherish,
his fond memories

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
011 2526 879

ஆருயிர் தம்பி (விஜயா குடும்பத்தினர்)
கெக்ரர் கேமன் யோண்
( ஓய்வுபெற்ற பாதுகாப்பு பரிசோதகர்
யாழ். பல்கலைக்கழகம்)

B 1/2, அளுத்மாவத்தை, தொடர்மாடி, கொழும்பு – 15
077 601 1625, 011 254 0142

(cs.18606) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்க தொடர்ச்சிகள்...

**தக்க...**

என்று இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜன் தெரிவித்தார்.

இந்திய அரசின் உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது கொரோனா காலமாக இருக்கலாம். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு இருக்கலாம். இந்த நேரத்தில் குறித்த உதவியை தக்க தருணத்தில் செய்ய வேண்டியுள்ளது. இன்றைய நிகழ்வு ஒரு ஆரம்பமே. வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கும் குறிப்பாக மீனவ சமூகத்தின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். எமது கருத்துக்கள் மேடைப் பேச்சாக இருக்காது - என்றார்.

இதேவேளை - இந்தியாவின் அஸ்ட்ராஸெனகா தடுப்பூசி வழங்கலில் தாமதம் ஏற்பட்டபோது சீனா, சினோபார்ம் தடுப்பூசிகளை இலங்கைக்கு இலவசமாக வழங்கியது. அப்போது சீனத் தூதரகம், 'தக்க தருணத்தில் உதவி செய்பவர்களே உண்மையான நண்பர்கள் 'என்று பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-56)

**இந்த நிலைமை...**

விலைவாசி உயர்வை நன்கு அறிவேன். எரிவாயு தட்டுப்பாடு அதேபோன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நன்கு அறிவேன். கடந்த இரண்டு மாதங்களாக பொது மக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் இந்த நிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில் தெரிவித்தார். (அ-ஒ-5)

**'வீட்டை...**

பதிவிட்டனர். நாடு முழுவதும் சமூக வலைத்தளங்களில் 'கோ ஹோம் கோத்தா' வைரலாகி வருகின்றது. இதற்குப் பதிலடியாக ஆளும் தரப்பும் 'வீ ஆர் வித் கோத்தா' (WeAreWithGota) என்ற குறியீட்டை பயன்படுத்தி வருகின்றது. (அ-ஒ-5)


### யாழ்ப்பாணம் மாநகரசபை
### பகிரங்க ஏலவிற்பனை

யாழ் மாநகர சபையின் 2021 ம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனை எனக் காட்டப்பட்ட பொருட் களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 29.03.2022 ம் திகதி காலை 11.00 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் அன்றைய தினமே (29.03.2022) மு.ப 8.30 தொடக்கம் மு.ப 10.30 மணிவரை பொருட்களைப் பார்வையிட்டு ஏலத்தில் பங்குபெற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபா 500.00 இனைச் செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.


ஆணையாளர்,
யாழ் மாநகரசபை.

(cs 37678) (2.6)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்
செல்வன் **தமிழ்ச்செல்வன் கஜலக்சன்**



2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகள்களைப் பெற்று *அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைபெற்று* பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சாதனைகளைப் புரிய சரஸ்வதி தேவியை பணிகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(CR 37674) (2.6)

### காணி விற்பனைக்கு உண்டு

இருபாலை சந்திக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் இடையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.

(CS 18895) (4/6)

தொடர்பு:- 077 193 3490

### UK இல் கல்வி வாய்ப்பு

- 13 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- 13 வயது தொடக்கம் 17 வரையுள்ள மாணவர்களுக்கு உடன் விசா வழங்கப்படும்.

Grade 08 London → 4Years → O/L London → 2Years → A/L London → University UK
- Medicine
- Engineering
- IT & Others

தொடர்புகளுக்கு:
Tel : +94 74 229 3324 | Whatsapp : +44 7958 408 280
Email : principal@croydonmet.org.uk, joseph.vilvaraj@gmail.com

(CS 18897) (2.6)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations



யா/ உடுவில் மகளிர் கல்லூரி மாணவன் செல்வன்
**நிருபன் கிரிஷன்**

அவர்கள் 2021ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததையிட்டு, மனதாரப் பாராட்டுவதுடன் சிறந்த பெறுபேற்றைப் பெற வழி நடாத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனதார பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள்மார்

(CS 18900) (4/6)

सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

### இந்திய துணைத் தூதரகமும் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களமும்
இணைந்து நடாத்தும்

### இலவச சித்த மருத்துவ முகாம்

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறும்.

காலம் : 20.03.2022 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் : முருங்கன் டொன் பொஸ்கோ ரெக்
நேரம் : காலை 9.00 மணி முதல் - மாலை 4.00 மணிவரை

நிபுணத்துவம் பெற்ற சித்த மருத்துவர்கள் மூலம் இலவச மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் இலவச மருத்துவ பரிசோதனைகளுடன் (சலரோக, குருதி பரிசோதனைகள்) சித்த மருந்துகள் இலவசமாக வழங்கப்படும்.

**அனைவரும் வருக! பயன்பெறுக!**

(CR 8096) (4/6)



"Siddha For All"

75 Azadi Ka Amrit Mahotsav

### மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம்
### பதவி வெற்றிடம் - எழுதுநர், குறியீட்டு இலக்கம் 302/15
(விண்ணப்பங்கள் வெளிவாரியாக கோரப்படுகின்றது)

மேற் குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.சம்பள அளவுத்திட்டம்**
302/15 15,545.00-130x10-140x10-18245.00 (அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

**02. தகைமைகள்**
1. கூட்டுறவு ஊழியர் 16 வது சம்பள அளவுத் திட்டத்தில் எழுதுநர்/காசாளர்/ கணினிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**
2. கூட்டுறவு ஊழியர் (சாதாரண தரம்) பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம், சிங்களம் /தமிழ் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**03. வயது**
18-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

**04. பொது**
1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்த வேண்டும்.
2.சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் பொது முகாமையாளர், மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம் பிரதான வீதி உயிலங்குளம் என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 30.03.2022 திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(CR 8095) (4/6)

பொது முகாமையாளர், மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம், உயிலங்குளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பு இந்திய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

இந்தியப் பிரதமருடனான சந்திப்புத் தொடர்பில் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பிலும் உதவிகளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப் பட்டது.

விவசாயம், மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி, சுற்றுலா மற்றும் மீன்பிடித்துறை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப் பட்டுள்ளது.

நெருக்கடியான நேரத்தில் இந்தியா வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு இதன்போது நிதியமைச்சர் இந்தியப் பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ் ஜெய்சங்கர், இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரையும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நாட்டில் காணப்படும் நெருக்கடிகளுக்கு நான்கு முறைகள் ஊடாக தீர்வை வழங்க அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய உணவுப்பொருள், மருந்து மற்றும் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு இந்தியா கடனுதவியை வழங்கல், அந்நிய செலாவணியை அதிகரிக்க ஒத்துழைப்பு வழங்கல், திருகோணமலை எண்ணெய்க்குத கட்டமைப்பை நவீனமயப்படுத்தல் மற்றும் இலங்கையில் இந்திய முதலீட்டு வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் அவற்றில் உள்ளடங்குகின்றன.

இந்தியா - இலங்கைக்கு வழங்கும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் ஊடாக எரிபொருள், மருந்து வகைகள், சீனி, பருப்பு உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் இறக்குமதியாகவுள்ளன. (அ-ஒ-இ)

## 5 லட்சம்...

எரிவாயு விநியோகத்தை நிறுத்துவதாக லாப் மற்றும் லிட்ரோ நிறுவனங்கள் அறிவித்துள்ள நிலையில், இன்று முதல் உணவு விநியோகம் நிறுத்தப்படும் என அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கத் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சுமார் 5 லட்சம் பேர் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ-ஒ-இ)

## எரிவாயு...

எரிவாயுவை ஏற்றி வந்துள்ள கப்பல்களுக்கான கொடுப்பனவுகள் நேற்று மாலை செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கப்பலில் இருந்து எரிவாயுவை இறக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் இன்று முதல் எரிவாயு விநியோகம் வழமைக்கு திரும்பும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## இலங்கை...

ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இம்முறை அமர்வு தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக அரச தகவல் திணைக்களத் தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை ஐ.நா. கூட்டத்தொடர் இலங்கைக்கு வெற்றி மிக்கதாக அமைந்தது. முழு உலகமும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் 6 மாதங்களுக்கொரு முறை இலங்கை குறித்த அறிக்கையை முன்வைத்து அதன் மீது வாக்கெடுப்புக்கள் நடத்தப்படுவது மாத்திரம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இலங்கைக்கு எதிராக ஏன் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன?

மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எந்தவகையிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விடயதானங்களுக்கு உட்பட்டவையல்ல.

ஐ.நாவில் அறிக்கையை சமர்ப்பிப்பதாயின் அங்கத்துவ நாடுகள் சகலவற்றையும் அந்தச் செயற்பாட்டில் உள்ளடக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எதுவும் இடம்பெறுவதில்லை. மாறாக இலங்கை தொடர்பான விசாரணைகளும், அறிக்கைகளை சமர்ப்பித்தலும் மாத்திரமே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஐ.நா. அதன் அங்கத்துவ நாடுகள் அனைத்தையும் ஒரே கண்ணோட்டத்திலேயே நோக்க வேண்டும். அனைத்து நாடுகளினதும் இறையாண்மைக்கு மதிப்பளிக்க வேண்டும். ஆனால் இலங்கை விவகாரத்தில் பாகுபாடு காண்பிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் கீழ் இலங்கை தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலகத்துக்கு பல மில்லியன் நிதி செலவிடப்படுகிறது. கொரோனா அச்சுறுத்தலில் இருந்து மீள்வதற்கு ஒரு தடுப்பூசியைக் கூட வழங்க முடியாத நாடுகள் கூட உலகில் உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் எதற்காக இலங்கையை இலக்காகக் கொண்டு இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன? இவற்றின் இறுதி பிரதி பலன் என்ன?

பழைய காயத்தை மீண்டும் கிளறுவது நல்லிணக்கம் ஆகாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன என்பதை விரைவில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவோம்.

ஐ.நாவையும், ஏனைய சர்வதேச நாடுகளையும் திருப்திப்படுத்துவதற்காக நாட்டைக் காட்டிக்கொடுக்க முடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலும், சட்டமா அதிபர் தொடர்பிலும் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்த விவகாரத்தில் உள்ளக விசாரணைகள் ஊடாக தீர்வு காண முடியும்.

முப்படையினருக்கு எதிராக நல்லாட்சி அரசு இலங்கையை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத்தமையின் காரணமாகவே மக்கள் அந்த ஆட்சியை புறக்கணித்தனர். அதே தவறை மீண்டும் செய்வதற்கு நாம் தயாராக இல்லை - என்றார். (அ-ஒ-,இ)

## புத்தருக்கும்...

பிரித் ஓதுவதற்கோ ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என ஆலய தர்மகத்தா சபையும் ஊர் மக்களும் தீர்மானித்துள்ளனர்.

சைவ ஆலயமான இவ்வாலயத்தில் எந்த மதத்தவர்களும் வந்து வழிபட முடியும் எனவும், அவர்கள் தமது மதச் சின்னங்களை நிறுவுவதற்கோ அது சார்ந்த வழிபாடுகளை பேணுவதற்கோ முருகன் அடியார்களும் ஊர் மக்களும் அனுமதிக்க மாட்டார்கள் எனவும் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி முருகன் ஆலய உள் வீதியில், தீர்த்தக் கேணிக்கு அருகே, நீண்ட காலமாக அரச மரம் ஒன்று உள்ளது. போர் முடிவடைந்த பின்னர் அவ்வப்போது ஆலயத்துக்கு வருகின்ற பிக்குகள் முருகனை வழிபட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், இன்று பௌர்ணமி தினத்தன்று இங்குள்ள அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையொன்றை வைத்து பிரித் ஓதுவதற்கு பிக்குகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தகவல்கள் வெளியாகி இருந்தன. குறித்த செய்தி அறிந்த மக்கள் கடும் சீற்றமடைந்தனர்.

இது தொடர்பாக ஆலயத்தில் நேற்று விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்தக்கூட்டத்தின்போது சைவ ஆலயமான பறாளாய் முருகன் ஆலயத்தில் புத்தர் சிலை வைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு கடும் கண்டனமும் வெளியிடப் பட்டது.

இக்கூட்டம் நடைபெறுவதை அறிந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், மற்றும் வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தனர். (அ-ஒ-125)

## ஏறுது...

264 ரூபா 66 சதம் விற்பனை பெறுமதி 274 ரூபா 99 சதம். ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 346 ரூபா 72 சதம். விற்பனை பெறுமதி 360 ரூபா 18 சதம்.

இரு நாள்களுக்கு முன்னர் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 265 ரூபாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சடுதியாக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதால் நாட்டில் பொருளாதார நெருக்கடி இன்னும் தீவிரமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## இந்த...

தனது உரையில் நேற்றுத் தெரிவித்தார்.

'இன்றைய இக்கட்டான நிலைமை, நம் நாடு மட்டும் முகங்கொடுக்கும் ஒரு விடயமல்ல. முழு உலகமும் ஏதோவொரு வகையில் ஒரு சிக்கலான சூழ்நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. கொரோனாவால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருள்களின் விலை அதிகரித்தல் மற்றும் சில பொருள்களின் தட்டுப்பாடு ஆகிய அனைத்தும் நம் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை. ஆனாலும் நாம் மக்களின் பக்கம் நின்று நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம். இந்த நெருக்கடி ஒரு போதும் என்னால் உருவாக்கப்பட்டதொன்று அல்ல. அன்று இந்த நெருக்கடியை உருவாக்குவதற்கு காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசை விமர்சித்து வரும் நிலையில், இந்த நெருக்கடியை விரைவில் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நான் முயற்சிக்கிறேன்' - என்றார் கோத்தாபய.

அவர் மேலும் தனது உரையில்;

கடந்த காலத்தில் நான் எடுத்த சில முடிவுகளால் இறக்குமதிச் செலவை பெருமளவு கட்டுப்படுத்த முடிந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன், வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டோம். மேலும் உள்நாட்டில் எமது தேவைகளை பூர்த்தி செய்யும் கைத்தொழில்களை ஊக்குவித்தோம். அதேபோன்று, பல அத்தியாவசியமற்ற உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு, அந்தப் பயிர்களை நம் நாட்டில் பயிரிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அவற்றின் வெற்றிகரமான முடிவுகளை இப்போது காண்கிறோம்

இறக்குமதிச் செலவைக் கட்டுப்படுத்துவதில் நாம் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பிரச்சினை, உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் வேகமாக அதிகரிப்பதாகும். சராசரியாக, எமது இறக்குமதிச் செலவில் 20 சதவீதத்துக்கும் அதிகமாக எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் உலக சந்தையில் எரிபொருளின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது. இதனால்தான் நம் நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. எம் நாட்டில் வாகனங்களுக்கு மட்டுமன்றி மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

அதனால்தான், முடிந்தவரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த நான் தொடர்ந்தும் கலந்துரையாடி குறித்த நிறுவனங்களை ஊக்கப்படுத்தினேன்.

எனவே எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களும் இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நீங்கள் புரிந்துகொண்டு செயற்படுத்துவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன் - என்றார். (அ-ஒ-5)

## நேற்றைய...

உட்பட தென்னிலங்கை ஆளும் தரப்பினர் அடிக்கடி தெரிவித்து வரும் நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நேற்றைய உரையிலும் அது எதிரொலித்தது.

'நாங்கள் எதிர்கொண்ட கொடூரமான பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் முன்னணியில் இருந்த படையினர் மற்றும் போரில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது. நாம் வரலாற்றில் பல முறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை இடர்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம். கடந்த கொரோனா நோய்த் தொற்றை நாம் எதிர்கொண்ட விதம் சர்வதேச அமைப்புக்களால்கூட பாராட்டப்பட்டது. தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்' - என்றார். (அ-ஒ-இ)

## கோத்தா உரை...

யின் வழமையான சுழற்சி முறையிலான மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஜனாதிபதியின் உரைக்காக இரவு 8.30 மணிக்கு நாட்டின் எந்தப் பகுதியிலும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அதற்கு அமைவாக ஜனாதிபதியின் உரை ஒளிபரப்பான போது மின்தடை நடைமுறைப்படுத்தப் படவில்லை. ஆனால் அதன் பின்னர் நாட்டில் சுழற்சி முறையில் மின் தடை நடைமுறையானது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மானிப்பாயில்*

# வாள்வெட்டுக் குழு தலைவர் கைதாம்

## கூறுகின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம், மானிப்பாய் லோட்டஸ் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து இளைஞன் ஒருவனும் அவனது தந்தையும் நேற்று மதியம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இளைஞன் யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டில் ஈடுபடும் தனுரொக் குழுவின் தலைவரான பத்மராஜா தனுசன் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது வீட்டில் நடத்திய சோதனையில் அங்கிருந்து வாள் மீட்கப்பட்டதாகவும் அதன் காரணமாக அவரது தந்தையையும் கைது செய்ததாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ஒ-26)

*சர்வதேச...*

யில் நேற்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வாக, சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு எதிர்க்கட்சிகள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்த நிலையில், ஜனாதிபதி நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் எமது அந்நிய செலாவணி நெருக்கடி.

**பற்றாக்குறை**

ரூபா நெகிழ்வுக்கு முன்னர் இருந்த நிலைமையின் பிரகாரம், இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர். கடந்த இரண்டு மாத கால தரவுகளின்படி, இந்த ஆண்டு 22 பில்லியன் டொலர் இறக்குமதி செலவை நாம் ஏற்க வேண்டியுள்ளது. அதன்படி, 10 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக்குறை உருவாகும்.

அண்மைக்கால தரவுகளின்படி, இந்த ஆண்டு சுற்றுலாத் துறையிலிருந்தும் அதேபோன்று தகவல் தொழில்நுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்தும் சுமார் 3 பில்லியன் டொலர் கிடைக்கக்கூடியதோடு, வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 2 பில்லியன் டொலர் கிடைக்கும். அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 5 பில்லியன் டொலராக இருக்கும்.

இதற்கிடையில், இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அப்போது 11.9 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஏற்படும்.

ஏனைய கடன் உதவிகள் மற்றும் முதலீடுகளாக 2.5 பில்லியன் டொலர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் அந்நிய செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

**மாற்றம்**

ஆனால், ரூபா நெகிழ்வின் பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலரில் இருந்து 20 பில்லியன் டொலர் வரை குறைத்துக் கொள்ளவும் முடியும். அப்படியானால், வர்த்தக பற்றாக்குறையை 7 பில்லியன் டொலர் வரை குறைக்க முடியும். அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, சேவை ஏற்றுமதியின் மூலம் 4 பில்லியன் டொலர் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 5 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம். அதன்படி, வர்த்தக பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், அந்நிய செலாவணிகையிருப்பை அதிகரிக்கவும் செயற்பட வேண்டும். இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்களது கடன் தவணையை திருப்பிச் செலுத்துவது குறித்து கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். இதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய பொறிமுறையின் மூலம் செயற்படுத்துவதற்கு அரசு பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது.

**ஐ.எம்.எவ்.**

சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ.எம்.எவ்.) நேற்றைய (நேற்றுமுன்தினம்) கலந்துரையாடலும் இந்த நோக்கத்துடனேயே இடம்பெற்றது.

ஒரு வருடத்துக்கு நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதே இந்தக் கலந்துரையாடலில் எமது எதிர்பார்ப்பு. சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆய்வுசெய்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன் - என்றார். (அ-ஒ-5)

## காணி தேவை

யாழ்ப்பாணத்தில் 1 1/2, 2 பரப்பு காணி தேவை. பலாலி வீதி, K.K.S. வீதி, இராசவீதி விரும்பத்தக்கது.

077 400 1836

## வேலைக்கு ஆட்கள் தேவை

**எலக்ட்ரீஷியன் தேவை**

UPS Power, battery Charger, Coil சுற்றத் தெரிந்தவர்கள், Solar power bank பொருத்தல் வேலைகளுக்கு மற்றும் **Solar light** விற்பனையாளர்கள் (இருபா லாரும்) தேவை. (CS 18899 (4/6)

021 222 8854, 077 555 5100

## பெண் உதவியாளர் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு பெண் உதவியாளர் (சிட்டை எழுதுனர்) தேவை.

**தகைமை :- O/L** (CS 18902) (4/6) 074 228 1682

## வேலையாள் தேவை

**பெயின்ற், மேசன், அலுமினியம், கூரை வேலை**

பெயின்றிங், மேசன் வேலை, அலுமினியம் பிற்றிங், கூரை வேலை கொன்ராக்ட் வேலை அடிப்படையில் செய்வோர் உடன் தேவை. (CS 18901) (4/6) 078 502 9616

## வேலை ஆள் தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்க இருக்கம் சுப்பர் மார்க்கட் இற்கு வேலை ஆள் தேவை.

❖ **உதவி முகாமையாளர்**

**கல்வித்தகைமை:- கணினி மற்றும் ஆங்கில அறிவு**

(CS 18906) (4/6)

077 355 1631, 077 354 9625

**வேலைவாய்ப்பு**

யாழில் இயங்கி வரும் முன்னனி கட்டட நிர்மாண நிறுவனமான GreenTag Engineers & Contractors (Pvt) Ltd நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம்.

- **கணிய அளவையியலாளர் (Quanity Surveyor)**
- **கொள்வனவு உத்தியோகத்தர் (Purchase Officer)**
- **களஞ்சிய பொறுப்பாளர் (Store Keeper)**


சுயவிபரக்கோவையை 25.03.2022ற்கு முன் அனுப்பிவைக்கவும்.

greentagpvtltd@gmail.com | WhatsApp – 077 077 0003

(CS 18903) (4/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 01 . 1938



மறைவு 16 . 03 . 2022

## முருகேசு நாகராசா

(ஓய்வுபெற்ற சாரதி இ.போ.ச)

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முருகேசு நாகராசா நேற்று (16.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கதிரவேலு - உமையாத்தை தம்பதியரின் அன்பு மருமகனும், முத்தாச்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், செல்லம்மா, மீனாட்சி மற்றும் உமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராமதாஸ், ஜெயசிங்கம், ராதிகா, வரதராசா, ஈஸ்வரன், சிறிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரி, கிரிசாந்தி, பாஸ்கரன், பிருந்தா, ருயந்தா, சோபனா ஆகியோரின் மாமியாரும், பிரியங்கா, பிரசாத், நிஷா, சாலினி, றஜீவன், கிருபன், சறினா, விபுசன், அனுசன், விதுசா, திவ்ஜா, டனுசன், ரிஷிகாந், அபினாஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

**சுழிபுரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**

**ஈஸ்வரன் (மகன் - 076 108 5496)**

(cs 18896) (2.6)

# நன்றி நவில்கின்றோம்



கடந்த (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை முருகன் திருவடி சென்றடைந்த எமது தந்தையாரும் பறாளை முருகன் ஆலய பரம்பரை குருவுமாகிய

## பிரம்மஸ்ரீ மு. பாலகுருசாமிசர்மா

அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் அனுப்பி வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி 'பிரசுரங்களை தயாரித்து அனுப்பியவர்களுக்கும் மற்றும் எம்முடன் தோளோடு தோள் நின்று சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய தொண்டர்கள், அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

**குறிப்பு - எதிர்வரும் 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன உபசார நிகழ் வில் கலந்து சிறப்பித்து அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**குடியிருப்பு, சுழிபுரம்.** **குடும்பத்தினர்** (2x6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.